# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

வரதர் வெளியீடு


## தீபாவளிச் சிறப்பு இதழ்

வணக்கம், புதினத்துக்கு இது தலைத்தீபாவளி! —தலைத் தீபாவளிக்காரருக்கு இருக்க வேண்டிய மிடுக்கும், கம்பீரமும் 'புதினத்'திலும் நிறைந்திருக்கிறது. 'புதினம்' ஆரம்பித்து ஆறுமாதத்துக்குள் அழகான மலரொன்றை தமிழ் வாசகர்களின் கரங்கவில் சமர்ப்பித்துவிட்டோமெனத் திருப்தியடைகிறோம். புதினத்தின் வருங்காலச் சிறப்பிதழ்கள் எப்படி இருக்குமென்பதை இந்த இதழ் சூசகமாக உணர்த்தும்.

தீபாவளிச் சிறப்பிதழ் வெளியிடுவதென மூன்று வாரங்களுக்கு முன்புதான் எண்ணினோம். விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஓவியர்கள், அனைவரது ஒத்துழைப்பும் மகத்தானதாயிருந்தது. யாவருக்கும் நன்றி.

—ஆசிரியர்



புதுச்சட்டை! பூவிரிகு!



புத்தாடை பூண்டு, பொட்டிட்டுப் பூச்சூடி,
வட்டக்கரிய விழி வலைவீசி,

'புதினத்தை' அலங்கரிக்கப்
பொலிவோடு நிற்கின்றாள்!

## விரவுஞ் 'சுடர்' காண்போம்!

1

பொல்லாத பேய்ப்புயற் காற்று—'சாந்தி'
உள்ளூரக் காட்டும் 'நாள்' தீபத்தை ஏற்று
எல்லாம் இருட்தோற்றம் நேற்று—ஏதம்
இற்றுப்போம் இந்நாள் உன் இதயத்தை மாற்று.

2

ஆணவ நெஞ்சப்போ ராட்டம்—அன்பே!
வேணும், இன்றூர் உலகெங்குங் கொண்டாட்டம்;
மாணுடைக் கும்மி, கோ லாட்டம்—இந்து
மனைதோறும் மல்கும் நாள்! வேண்டாம் பொய்
[வாட்டம்.

3

'அசுரக்' குணமோட்டும் இந்நாள்—ஆழி
அலைமேவித் துயில்வோனின் பொற்கோயில்
[முன்னல்
விரவுஞ் சுடர்காண்போம் கண்ணல்—பெண்ணே!
விரைவாய் உள் நிறையின்பம், பெறுவாய் நீ
[பின்னல்.

—"இராஜபாரதி"

## தீப ஒழிபாடு!





## சைவபாடப் பயிற்சி

இப்பொழுது முக்கியமாகக் கருதப்படும் சைவசமய பாடத்தில் மாணவர் நல்ல தேர்ச்சியடையவும், கொழும்பு விவேகானந்த சபையார் நடத்தும் சைவசமய பாடப்பரீட்சைகளில் சித்தியடையவும் மிக உதவியாக இப்பயிற்சி நூல்கள் வெளிவந்துள்ளன.

4-ம் வகுப்பு 80 சதம், 5-ம் வகுப்பு 90 சதம், 6-ம் வகுப்பு ரூ 1. 00, 7-ம் வகுப்பு ரூ 1. 15, 8-ம் வகுப்பு ரூ 1. 25,

தொகையாக வாங்குவோருக்கு தகுந்த கழிவு உண்டு.

விற்பனையாளர்:- ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம்.





அழகான பின்னணிக் காட்சிகளுடன்
நவீன முறையில்
கவர்ச்சி மிக்க படங்கள் பிடிக்க
சிறந்த இடம்

குகன் ஸ்ரூடியோ,
பருத்தித்துறை.

தொலைபேசி எண்: 97



தீபாவளித் திருநாளுக்கு

சிறந்த புடைவை வகைகளை
குறைந்த விலையில்
விரும்பிய விதமாகத் தெரிவுசெய்ய
விஜயம் செய்யுங்கள்

ஞானபண்டிதன்
ஜவுளிக்கடை

228, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



எமது
வாடிக்கையாளர்களுக்கு
தீபாவளி
வாழ்த்துக்கள்!

★ சூரியப் பிரகாஷ் ★
டையேர்ஸ் அன் றைகிளீனேர்ஸ்
சாயம் போடுவதிலும் றைகிளீன் செய்வதிலும்
வட இலங்கையில் மிகப்பெரிய ஸ்தாபனம்.
பஸ்நிலையத்துக்கு முன்பாக, யாழ்ப்பாணம்.
போன்: 474 ... ... தந்தி: றைகிளீன்

## 'முருகையன்'

போகிறேன் என்றா சொன்னாய்?
அதற்கென்ன, போய்வா; "அன்பே,
சாகிறேன், உன்னை எண்ணித்
தளர்கிறேன்; பிரிவால், அந்தோ!
நோகிறேன்; என்று நெஞ்சில்
நுழைந்தேன்?" என்றென் றெல்லாம்
யார் கொலாம் அழுதார்? ஆமாம்
எழுந்து போ, இருக்க வேண்டாம்.

அலுவல் வேறெனக்கும் உண்டே.
அருட்பிர காசத்தாரின்
கலை இதழ் மலருக்காகக்
கவிதை ஒன்றெழுத வேண்டும்.
கலியாணம் என்று சொன்னான்
கந்தையா; வாழ்த்துத் தந்தி
செலவிலே சுருக்க மாகச்
சிறியதாய் அனுப்ப வேண்டும்.

எழுந்த நீ போகாதிங்கே
இருந்ததேன்? வம்புப் பேச்சில்
அழுந்தினால் தப்பி மீளல்
அரிதிலும் அரிய தன்றோ?
பழங்கதை பேசி னாலும்
பற்றுனக் கதிலே உண்டு.
கழிந்ததே நேரம் வீணாய்!
கதிரையில் வேர் கொண் டாயோ?

## 'நாவற்குழியூரன்'

போகிறேன் என்றா சொன்னாய்!
போய்விடிப் போதே உன்னாற்
சாகிறோம் சமயப் பூதா!
சமூகத்தைப் பிளந்து விட்டாய்!
வேகிறோம் என்றெ மக்கோர்
விடிவுவந் தெய்து மென்று
நோகிறேன் உனை வளர்த்த
நொய்மதி யாளர் தம்மை.

போய் விடிப் போதே உன்றன்
புன்மைகள் எமக்கு வேண்டாம்;
வாய்விட வகையுமில்லை
வடிவில் நற் பசுவாய் ஊழிப்
பேய் நட மாடி எங்கும்
பிரிவினை ஊட்டி வைத்தாய்,
போய் விடிம் மட்டி லேனும்
புதுயுகம் பிறக்கட் டிங்கே.

சாதியை வளர்த்தே எம்முட்
சஞ்சலம் வளர்த்தாய், விந்தை
நீதியை உரைத்தாய், இங்கு
நிம்மதி கெடுத்தாய், அந்த
ஆதியை மறைத்தாய், நூறு
ஆகமம் வகுத்தாய், என்ன
சூதினை இழைத்தாய் உன்றன்
சூழ்ச்சிகள் போதும் போ போ.

## 'மஹாகவி'

காதலி, உன் பேச்சிற்
களங்கத்தைக் காணவில்லை,
மாதர் இனத்தில்
மயங்கச் சமைந்துள்ள
ஆண்மை இடையே,
அகலாது நின்னுடைய
கேண்மை மட்டும் வேண்டிக்
கிடக்கும் எனை நீ அறிவாய்—
ஆனாலும், சொற்களிலே
அப்பழுக்கே இல்லாமல்,
ஏனோ உளற
இசைந்து விட்டாய் கல்நெஞ்சு?
நீ வித்தடி என்
நிலைக் கெல்லாம்! இன்று கதைச்
சாவித்திரிகளை ஏன்
சாட்டுக் கிழுக்கின்றாய்?
அற்புதங்கள் செய்விக்கும்
நின் அருகுக்கப்புறம் போய்
நிற்கவா, கூறு;
நிமிர்ந்தென்னைப்பார்; கற்பைப்
பிய்த்தெறிந்து வீசும்
பெருங்கண்நெடு நோக்கில்
வைத்திருக்கும் உண்மைகள்
ஏன் வாயிற் பிறக்கவில்லை?
என்னைப் பிழிந்த
இரத்தம் குளித்து விட்டா
நின் மானம் காக்க
நினைத்து விட்டாய்?
நீயே
தொடக்கி விட்ட பேராசை,
தொட்டு விட்டால் தூர்ந்து
படுத்து விடும் என்றா என்
பாதகி, உன் வெற்றிடையை
ஏதோ பெரிதென்றெடுத்து
மறைத்தாய்? என்
காதலுக்காய், கொன்று
கசக்கத் துணிந்தாயா?
கூசும் விழியாலே
கூடல் விளைப்பாயே,
வேசி, இதினும்
விபச்சாரம் பொல்லாதோ?



# தீபாவளிக் கவியரங்கம்

# "போகிறேன் என்றே சொன்னாய்!"

## 'திமிலைத் துமிலன்'

பள்ளிப் பருவத்தில் நானிருந்தேன்—சின்னப்
பாவை உருவத்தில் நீயிருந்தாய்—தத்தும்
கிள்ளை வடிவத்தில் நானிருந்தேன்—அதன்
கீச்சுக் குரலென நீயிருந்தாய்—ரோஜா
முள்ளின் மலரென நானிருந்தேன்—இளம்
மொட்டின் வடிவிலே நீயிருந்தாய்—அடி
கள்ளிஎன் உள்ளம் கலக்கிவிட்டே—முல்லை
காற்றில் மறைந்துநீ எங்குசென்றாய்?

மாலைப் பொழுதென நானிருந்தேன்—துள்ளி
வந்த நிலவென நீயிருந்தாய்—பசுஞ்
சோலைப் பயிரென நானிருந்தேன்—தென்றல்
தூவும் பனியென நீயிருந்தாய்!—அந்த
நீலக் கடலென நானிருந்தேன்—அதில்
நீந்தும் திரையென நீயிருந்தாய்!—கண்கள்
காலை விழித்துனைக் கண்டதிலை—முல்லை!
காற்றில் மறைந்துநீ எங்குசென்றாய்?

ஊஞ்சற் கயிற்றினை நானறுத்தேன்—கண்ணில்
ஊறும் துளிகளை நீ உகுத்தாய்—மிகும்
வாஞ்சையிற் கட்டி மகிழவந்தேன்—புள்ளி
மானென ஓடி மறைந்துவிட்டாய்!—நெஞ்சிற்
பூஞ்சணம் பற்றிப் பொடிந்து விட்டேன்—வந்து
"போகிறேன்" என்றுநீ புன்னகைத்தாய்—எங்குன்
தீஞ்சுவை கொட்டும் மழலையடி?—முல்லை
தேடித் தவிக்கிறேன் எங்கு சென்றாய்?

## 'நீலாவணன்'


மண்ணிடை இரவுக் கன்னியின் ஆட்சி இன்னும் தேயவிலை-இளம்
தென்னையின் ஓலை பண்ணிய இன்பப் பாட்டுகள் ஓயவிலை
என்கடை வாயில் உன்னிதழ் ஊட்டிய ஈரம் காயவிலை-எழில்
மின்னிடும் என்றன் மென்முலை தானும் பின்னே சாயவிலை!

குறுமணல் மீது கொண்டல் தவழ்ந்த சுவடும் மாறவிலை—அங்கு
புறாவுகள் வந்து குறுநடைசெய்து கோலம் கீறவிலை
இரவின் 'அம்மிக் குருவி'கள் இன்னும் இல்லம் சேரவிலை—என்னை
இடைவெளி யின்றி இறுக அணைத்த இதழும் தூரவிலை!

பருவப் பெண்ணும் இரவுக்கன்னி தவறிப் பெற்றபயல்-அந்தப்
பரிதிக் குஞ்சைக் ககனத் தெருவின் முடிவில் போட, அவன்
உருவப் பொலிவின் உதயத் தொளியில் உறவை வெட்டுகிறாய்-பொ
உதிரக் கடலின் நடுவில் படகில் நடையைக் கட்டுகிறாய்! [ல்லா

"விண்ணின் தாரை எண்ணிப் பொழுதை வீணாக் கிடவல்ல-அணு
விஞ்ஞா னிகள்போல் மண்மேல் உயிர்கள் நீறாக் கிடவல்ல!
உண்ணீர் என்றே மீன்கொடுவந்திவ் வுண்ணா உலகத்தின்-பசி
ஓட்டப் போகின் றேனென் றேசொன் னாய்"என் உயிரத்தான்!

வேம்புக் குமரி தென்றல் காற்றின் வெறியைச் சாடுகிறாள்-அந்த
வீம்புக் காரன் விரகப்பேயோ டவளைக் கூடுகிறான்!
தேம்பிக் கொண்டே ஆடையை அள்ளி மார்பை மூடுகிறாள்—உன்
தேடித் தேடி ஆழிக்கரையில் ஒருபெண் வாடுகிறாள்! [னைத்



சகலரகப்
பிடவை
வகைகளும்

* * *

பிரதானமான
சேலை
வகைகளும்

★ புத்தம் புதிய டிசைன்களில் எப்போதும் கிடைக்குமிடம் ★

# சாறி எம்போறியம்

124, கே. கே. எஸ். வீதி, : : யாழ்ப்பாணம்.

தொலை பேசி: 418.

கண்ணைக் கவரும் பலரகப் புடவைகள்

சீத்தைவகை முதலான எல்லாக் குடும்பத் தேவைகளுக்கும்

மற்றும் அலங்காரப் பொருட்களுக்கும் சிறந்த இடம்

"கணேசன் ஸ்ரோர்ஸ்"

இன்னும் சாய்ப்புச் சாமான்களையும் சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

சகலவித தேவைகளுக்கும் ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை புலனாகும்

மறவாதீர்கள்!

நம்பிக்கையும் நேர்மையுமான இடம்

★

# கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். வீதி, : : யாழ்ப்பாணம்.

உரிமையாளர்: க. செ. கனகசபை.

பெஷல்
ரங்கள்
ருகிப் பருகுவது
பானங்களே!
ட்டங்களையும்
ழ்விப்பது
கோ கோலா!'
னும்!
பாக்டரி
வீதி. யாழ்ப்பாணம்.
தி: 'சீதா' (SITA)

வான்
விடுதி)
தங்குவதற்கு அறைகள்
போசனம்
போதிய இடம்
காலத்தில் கவனிப்பு
யப்பெற்ற இடம்
வான்
கொழும்பு-2.


அவற்றை
ருக்கும்

ள்ளன.
வெயிடலாம்.
5
0

# நேயர்களுக்கு புதினம் அளிக்கும் 'தீபாவளிச் சேலை அலங்காரம்'



பனாரிஸ் பட்டுடையில்
இலங்கை சினிமா நட்சத்திரம்
திஷ்னு ரஞ்சனி



நைலான் சேலை அணிந்த நங்கை
ஜெஸ்பெலின்
கவர்ச்சித் தோற்றம்



பெரனுஸ் டிஸ் யூ சேலை அணிந்து
செல்வி ரதினி யின்
சிறப்புக் காட்சி



இந்தியன் வோயில் சேலையில்
செல்வி பிரேமாவதி யின்
ஒய்யாரம்!

['புதின'த்துக்கென்றே இப் போட்டோக்களைக் கவர்ச்சிகரமாகப் பிடித்தவர்: ரமணி]

## திரு. வே. சிவக்கொழுந்து
### அவர்கள் அளிக்கும்
## ரூபா 3000 பரிசுகள்

*1931*-ம் ஆண்டில் திரு. வே. சிவக்கொழுந்து அவர்களின் பிரசுரம் ஒன்று **"தமிழ் அக்ஷர கணிதம்"** என்பதாகும். இன்று **"உலகபூமிசாஸ்திர விளக்கம்"** என்னும் நூலைச் சிகரமாகக் கொண்டு அன்னாரது பிரசுரங்கள் முப்பத்தைந்து வெளியாகியுள்ளன. மொத்தம் 145 பதிப்புகள் ஒவ்வோர் பதிப்பிலும் சராசரி 5000 பிரதிகள் வீதம் பார்க்கும்போது 6525000 பிரதிகள் ஆசிரியரின் தனி மதிப்பும் மிதமிஞ்சிய ஆதரவுங் காரணமாக இலங்கையின் பல பாகங்களிலும் தமிழ்ச் சிறுவர் சிறுமியரின் தளிர்க் கரங்களின் காட்சி தந்து பிஞ்சுள்ளங்களில் பதிந்து, மதலைவாய்களில் அன்னாரின் பெயரை உச்சரிக்க வைத்துப் பெரும் பேற்றினை அளிக்கின்றது.

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள், கடந்த 30 வருட ஆதரவு கருதி ரூபா. 3000 பெறுமதியான பரிசுகளை தமிழ் மாணவர்களுக்கு வழங்குகின்றார்கள்.

### பரிசுப் பத்திரங்கள்

திரு வே. சிவக்கொழுந்து அவர்களியற்றிய ஐந்தாந்தரக் கணிதம் 6-ம் பதிப்பிலும், நாலாம் சூழல் 2-ம் பதிப்பிலும் பரிசுப் பத்திரங்கள் இணைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் இப் பத்திரங்களை எடுத்து நிரப்பிப் பிறகுறிப்புகள் என்ற இடத்தில்,

1. இரண்டாந் தவணை 4-ம் அல்லது 5-ம் வகுப்பில் திறமைசாலியாகத் தோற்றிய ஒரு மாணவனது அல்லது மாணிவியினது பெயரும்
2. உங்கள் ஆசிரிய சங்கத்தினது பெயரும், காரியதரிசியின் பெயரும் எழுதி 10 சத முத்திரை ஒட்டி 31-12-61 க்கு முன்னர் அனுப்பி வையுங்கள் - அல்லது முதலில் ஒரு அஞ்சலட்டை எழுதிப் பதிவு செய்துகொண்டு 10-1-62 க்கு முன் பரிசுப் பத்திரம் நிரப்பி அனுப்புங்கள். டயறிகள் அனுப்புவோம். பரிசுகள் ஒழுங்கு செய்யப்படும்.

## ஜனவரி 1962-ல் வழங்கப்படும் 3000 ரூபா பரிசுகள்.

| | |
|---|---|
| 1. 1961 டிசம்பரில் ஆசிரிய சங்கங்கள் நடத்தும் ஜே. எஸ். ஸி. பரீட்சையில் விசேட சித்தி பெறும் 5 மாணவர்க்கு 5 தங்கப் பதக்கம் பெறுமதி ரூ. | 300-00 |
| 2. ஷை 5-ம் வகுப்புப் பரீட்சையில் விசேட சித்திபெறும் 10 மாணவர்கட்கு ரூ. 250-00 ரொக்கம் அல்லது புத்தகம் ரூ. | 250-00 |
| 3. எமது நூல்களை உபயோகிக்கும் 50 மாணவர்க்கு 6-ம் வகுப்பு நூல்கள். உங்கள் பாடசாலையில் 2-ம் தவணைப் பரீட்சையில் முதலாவதாக வந்த ஒரு மாணவனது அல்லது மாணவியினது பெயரைக் குறித்து அனுப்புக. பெறுமதி ரூ. | 450-00 |
| 4. வறிய திறமைசாலியான மாணவர்க்கு 2-ம் தவணைப் பரீட்சையில் முதலிடம் பெற்ற நாலு ரூ. 250 வீதம் அதிர்ஷ்டப் பரிசு ரூ. | 1000-00 |
| 5. ஆசிரியர்க்கு 1500 தினசரிக் குறிப்புகள் பெறுமதி ரூ. | 1000-00 |
| மொத்தம் ரூ. | 3000-00 |

உரிமையாளர்:

**கலா பவனம்**
(வடலங்கா புத்தகசாலை)
மேலைப்புலோலி, : : பருத்தித்துறை.

# காலனோடு போராடிய கறேல் செஸ்மன்!

## பாதகங்கள் பல புரிந்த ஒருவனின் பரிதாப — பயங்கரக் கதை!

ஆயிரத்தி தொள்ளாயிரத்தாரும் ஆண்டு, ஏப்பிரல் மாதம், நாலாம் தேதி. மாலை நான்கு மணியிருக்கும். கலிபோனியாவில் உள்ள வீதிகளில் ஒன்றாகிய 'சில்பிகிஸ்டன்' வீதியில் பனிரெண்டு வயதுப் பாலகன் ஒருவனும் வயது முதிர்ந்த தாய் ஒருத்தியும் மெதுவாக நடந்து கொண்டிருந்தார்கள்.

அந்தத் தாய்க்கு எப்பொழுதும் வருத்தந்தான். அதற்கு இரண்டுகாரணங்கள் இருந்தன. ஒன்று உடல் நோய். மற்றது உடல் நோய்.

கட்டிய கணவன் அவரைக் கவனிப்பதேயில்லை. கடனாளியாகிவிட்ட அவர் இன்னொரு பெண்ணை திருமணம் செய்ததுமட்டுமல்லாமல் இந்தப் பெண்மணியின் சொத்துக்களையும் கரைத்துவிட்டார். அப் பன்னிரண்டு வயதுப்பாலகனைக் காப்பாற்றும் பொறுப்பும் அந்தப் பெண்ணின் மீதுதான் விழுந்தது. அவள் எவ்வளவோ கஷ்டத்துக்குள்ளேயும் தனது மகனை காப்பாற்றுவதற்காக ஓர் சிறிய ஹோட்டல் நடத்தி வந்தாள். விதியென ஒன்று இருக்கிறதே அப்படிப்பட்ட தாய்க்கு ஏதோ உடல் வருத்தம்! அதற்காகத்தான்இப்பொழுது அவள் டாக்டரிடம் சென்றுவிட்டு தனது இருப்பிடத்துக்கு திரும்பிக் கொண்டிருந்தாள். பன்னிரெண்டு வயதுப் பாலகன் தான் அவருக்குத் துணை.

தாய்க்கு மகனிலிருந்த அன்பிலும் பார்க்க, மகனுக்குத் தாயிலுள்ள அன்புதான் அதிகம். அதற்குக் காரணம் என்னவென்றே தெரியாதென்கிறான் அந்தச் சிறுவன். தனது அம்மாவிற்கு இந்தக் கதி நேர்ந்துவிட்டதே என்ற வருத்தத்துடன் அவளது கையைப் பிடித்துக் கொண்டுஅவன் செல்லும்போது ஒரு கார் மிகவும் வேகமாக வந்து மோதிவிட்டது!

தாய்கத்திக் கொண்டே கீழேவிழுந்தாள்! இரண்டு கைகளாலும் இரத்தம் வழிந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்தமகனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிறுபிள்ளைதானே?..... தனது அம்மாவுடன் சேர்ந்து அவனும் 'ஓ' என அழுதான். அந்தக் காரை ஓட்டிக் கொண்டு வந்தவள் ஓர் பெரிய சீமாட்டி! இவர்கள் இருவரும் அழுவதையும் வீதியிலே சனம் கூடுவதையும் பார்த்த அவள் கிறு கிறு வென காரைவிட்டிறங்கி வந்து, அச்சிறுவனின் கன்னத்திலே ஒரு அடிவிட்டாள்! 'என்னடா அழுகிறாய்? அவளைக் கார் தட்டியதற்காக இருவருமாகச் சேர்ந்தழுது பணம் பறிக்கலாமென்று நினைக்கிறீர்கள்? ஒரு பொழுதும் நடவாது!' இதைக் கூறிவிட்டு அச்சீமாட்டி காரை எடுத்துக்கொண்டு போய் விட்டாள்.

அப்பையனுக்கு அச்சீமாட்டிமேல் வந்த கோபமென்றால் சொல்லவே முடியாது! அச்சீமாட்டியை ஒழித்துவிடவேண்டுமென்று கறுவினான் பாசம் அப்படி அவனை எண்ணத் தூண்டியது! ஆனால் அவனால் என்னதான் செய்ய முடியும்? அவளோ பெரியசீமாட்டி! இவனோ பன்னிரண்டு வயதுப் பாலகன்! தன்னால் ஒன்றுமே செய்ய முடியாதென்ற நிலைமையிலேதான் அவன் அப்பெண்மீதோர் துவேஷம் கொண்டான், காலாகாலத்தில் அத்துவேஷம் பெண்கள் சமுதாயத்திலேயே திரும்பியது! அதற்குக் காரணம் அவன் தன் தாயின்மீது கொண்டிருந்த அளவுகடந்த பாசமே!

இச்சிறுபையன்தான் பிற்காலத்தில் பெண்கள் சமூகத்தையே பழிவாங்க சபதம் செய்து அதன்பயனாக எண்ணற்ற கொலைகளும் கொள்ளைகளும் செய்த கறேல் செஸ்மன்.

காரில் அடிபட்டு சிறிது காலத்திற்குள்ளேயேசெஸ்மானின் தாய் இறந்துவிட்டாள். அந்தத் தாயின் ஈமைச் சடங்குகளைப் பற்றி செஸ்மான் தனது இறுதிக் காலத்திலே எழுதிய சொந்த வாழ்க்கைக் குறிப்பிலிருந்து சில வரிகள்.

"...... நான் எனது தாயின் சடலத்தை இறுதியாக பார்க்கும் பொழுது அத்தியாக உருவத்தின் முகத்திலிருந்த களை என்னை அப்படியே உருக்கிவிட்டது! உடன்டியாக எங்காவது போய்த் தற்கொலை செய்வோமா என்று கூட எண்ணினேன்; அவ்வளவு மனவேதனை; என்னால் என்மனச் சுமையை தாங்கவே முடியவில்லை! பாதிரியார் அம்மாவின் சடலத்தை தகனம் செய்வதற்கு இறுதி மரியாதை செய்யும்படி என்னை வேண்டினார்.! என்னால் மரியாதை செய்ய முடிந்தது ?'ஓ' வென அந்த மயானத்தின் அமைதியையும் கிழித்துக் கொண்டு அழுதேனே தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை! மயானத்துக்கு வந்திருந்தவர்கள் மிகவும் சொற்பந்தான். அதிலே எமதுகடைக்கு ஒழுங்காக வரும் ஸ்டீவின்சன் என்னும் கிழவரும் ஒருவர்! அவர் என்னைப்பார்த்து விட்டுத் தானும் சேர்ந்து அழுதார்.... ...நேரம் ஓடிக்கொண்டிருந்தது ...... இறுதி மரியாதைக்காக எல்லோரும் என்னை வற்புறுத்தினார்கள்........... இறுதிமரியாதைக்கு முன்னர் எனக்கோர் அற்ப ஆசை தோறியது! அதுதான் கடைசியாக ஒருமுறையாவது என்னை பெற்று வளர்த்து எனக்காகவே தனது வாழ்க்கையை தியாகம் செய்த அம்மாவை ஒருமுறையாவது தொட்டு தடவவேண்டுமென எனதாசையை வெளியிட்டேன். ஒருவரும் தடை சொல்லவில்லை!

அம்மாவின் முகத்தையே ஐந்து நிமிடங்கள் தடவிக்கொண்டிருந்தேன். அவளது மூடிய கண்களை பார்க்க எனக்கு அழுகை அழுகையாக வந்தது. அழுதுகொண்டே அத் தியாகசிகரத்தின் கன்னங்களை என்கைகள் வருடின. என் செய்கையை பார்த்த பாதிரியாரும் அழுதார். கடைசியாக அம்மாவின் கன்னத்தில் என் கன்னத்தை வைத்தழும்பொழுது ஸ்டீவின்ஸன் தாத்தா என்னை இழுத்தார். நானும் எழும்பி தாத்தாவின்தோள்களைப்பிடித்துக் கொண்டு அழுதேன்...... அவரும் அழுதார் .....சடலம் மட்டுமா புதைக்கப்பட்டது? ......என் நற்குணங்களையுமல்லவா சேர்த்து புதைத்தார்கள் ......"

இவ்வளவு நல்ல குணம் கொண்ட செஸ்மன்தான் பின்னர் படுகொலைகாரனாக மாறினான் என்றால் எம்மால் நம்புவதற்கே எவ்வளவு கடினமாகயிருக்கிறது?

(திகைப்பூட்டும் செய்திகளை அடுத்த வாரம் படியுங்கள்)

# இலக்கியக் கவிதை-சினிமாவில் வந்தது!

### யார் பாடியது? எதில் வந்தது?

இப்போது சினிமா தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஒருமுக்கிய பொழுது போக்காக அமைந்துவிட்டது. அதில் வரும் பாடல்களில் அநேகம் வெறும் 'டப்பா'ப் பாட்டுகள் என்று குறைகூறப்பட்டாலும் சில இலக்கியத் தன்மை உடையன என்பதைப் பலரும் ஒப்புக்கொள்வர். கீழ்வரும் பாடல்கள் சினிமாவுக்கு என்று பாடப்பட்டவையல்ல. ஏற்கனவே புலவர்களாலும் கவிஞர்களாலும் பாடப்பட்டு நூல்களில் - கவிதைத் தொகுதிகளில்- வெளிவந்திருப்பவை. சந்தர்ப்பம் நோக்கிச் சினிமாப்படங்களில் புகுத்தப்பட்டவை. இவை யார் இயற்றியவை? எந்தக் கவிதைத் தொகுதியில் உண்டு? எந்தச் சினிமாவில் வருகின்றது? எழுதுங்கள் பார்க்கலாம்?

★ சரியாக எழுதும் எல்லோர்க்கும் தகுதியான பரிசு உண்டு. ★

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தீம்பசி யுழல
இல்லி தூர்ந்த பொல்லா வருதனம்
சுவைதொறும் சுவைதொறும் பால்காணுது....
குழவி தாய்முகம் நோக்க தாய் எம்முகம் நோக்க
யாமும் நின்முகம் நோக்கி வந்தனம் மன்னு! .1

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்:..........................................

வட்டிலிலுந் தொட்டிலிலும் மார்மேலும்தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து—முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீ மூட்டுவேன். .2

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்:..........................................

கல்லானே யானாலும் கைப்பொருள் ஒன்றுண்டாயின்
எல்லோரும் சென்றங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள் மற்றீன்றெடுத்த தாய் வேண்
செல்லாதவன் வாயிற் சொல். [டாள்

கவிஞர் பெயர்..........................................

சினிமாவின் பெயர்:..........................................

மாடனைக் காடனை வேடனைப் போற்றி
மயங்கு மதியிலிகாள்—எத
னூடு நின்றோங்கும் அறிவொன்றே தெய்வமென்
றோதி யறி யீரோ 4

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்:..........................................

நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்தே
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தை
கோலமுழுதும் காட்டிவிட்டாற் காதற்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமே? 5

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்:..........................................

சலவை சவரம் செய்தாலும்
சாக்கடை கழுவுதல் செய்தாலும்
உலகுக் கதனுல் உபகாரம்
ஒன்றும் தெரியார் வெறும் பாரம் 6

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்..........................................

எட்டுத் திசையும் இடித்திடப் பேரிடி
எக்காள மிட்டுக் குதிக்குது பார்
கொட்டுமிசைக் குயில் கோமளமே புயல்
கோபத்தை எப்படி மாற்றிடுவோம். 7

கவிஞர் பெயர்..........................................

சினிமாவின் பெயர்..........................................

சூரியனும் ஒரு தொழிலாளி—தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரி அலையும் தொழிலாளி—எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி. 8

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்..........................................

மண்ணுக்கீடு பொன் கேட்டால்
வலியில் மனிதர் என்செய்வார்
கன்னி செய்த ஒப்பந்தம்
கண்ணிற் கண்டது ஒன்றுமில்லை. 9

கவிஞர் பெயர்:..........................................

சினிமாவின் பெயர்..........................................


உங்களுக்கு வேண்டிய

★ பவுண் நகைகளை

நம்பிக்கை நாணயமாக
கைதேர்ந்த சிறந்த தொழில்
நுட்பக் கலைஞர்களினால்

★ உங்களுக்கு பூரண திருப்தி அளிக்கும் விதத்தில் தயாரித்துத் தருவோம்.

காலத்துக்கேற்ற நாகரீக டிசைன்களில்
பலவித நகைகளையும் எமது
காட்சிப் பெட்டியில் பார்வையிடுங்கள்.



சுத்தமான வைரம்
முத்து நகைகள் விசேட
கவனத்துடன் தயாரித்துத்
தரப்படும்,

★

மு. பொன்னம்பலம் & சன்ஸ்,

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



உங்கள் கட்டிடங்களுக்கு

வேண்டிய எல்லாவிதமான

இரும்புச் சாமான்களுக்கும் எங்களிடம் விசாரியுங்கள்

★

கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும் சிமெந்து
உருண்டைக் கம்பிகள் ,, தீந்தை வார்னிஸ்
வகைகள்
கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
டிஸ்ரம்பர் எல்லா நிறங்களிலும்

பித்தளைப் பூட்டு, பிணைச்சல்
வகைகளும். தண்ணீர்ப் பம்புகளும்

எங்களிடம் குறைந்த விலைக்கு
பெற்றுக் கொள்ளலாம்

சண்முகம் ஸ்ரோர்ஸ்

222, ஆஸ்பத்திரி றேட்
யாழ்ப்பாணம்.

போன்: 697

# வாசகநேயர்களுக்கு 'புதினம்' அளிக்கு

## கனக. செந்திநாதன்

இரண்டு நூல்கள் வெளிவந்தன.

ஒன்று 'உள்ளக் கோவில்.' மற்றது 'பருவ மங்கையின் படுகொலை.'

'சீர் பெருகு மானியூர் சிவபிரானடி நின்ற செஞ்சொல் மலிகவிஞரேறு'—சிவப்பிரகாசனார்— பாடிய காவியம்தான் 'உள்ளக் கோவில்.' துப்பறியும் கதை உலகின் தூண் என்று புகழப்பட்ட 'கோதண்டம்' தீட்டிய மர்ம நாவல் 'பருவமங்கையின் படுகொலை.'

சேக்கிழார் பாடிய தெய்வப் பொக்கிஷத்திலிருந்த பூசலார் கதை 'உள்ளக்கோவிலாக' உருவெடுத்தது. பேர் தெரியாத மூன்றாந்தர ஆங்கிலத் துப்பறியும் நாவலின் அப்பட்டமான தழுவல் 'பருவமங்கை.' ஆனால்......... பருவமங்கையின் படுகொலை'க்கு முன் 'உள்ளக் கோவில்' எம்மாத்திரம்? விற்பனையில் 'பருவமங்கை' 'உள்ளக்கோவிலை' உருத்தெரியாமல் அடித்து விரட்டி விட்டாள். பலர் பல காரணங்களைக் கூறினர்.

கோதண்டம் கூறிய குன்றுப்பொன் மொழிகள் இவை:—"பிழைக்கத் தெரிய வேண்டுமையா முதலிலே. தமிழ், தொண்டு எல்லாம் அப்பாலேதான். 'ழகர ளகரம்' பிழையாக எழுதினாலும் அலெக்சாந்தரை அம்பலவாணராக்கத் தெரிந்தால் போதும். வாழ்ந்துவிடலாம். துப்பறியும் கதையில், மர்மப் படுகொலையில்—ஒரு மண்ணாங்கட்டியும் இல்லாவிட்டாலும் மூவர்ண அட்டை கண்ணைக் கவரவேண்டும். பல் அழகி, கொண்டை அழகி, பருவ அழகி என்னை வாங்கு, வாங்கு என்று வாசகரை மயக்க வேண்டும். வெளிப்பூச்சுத்தான் தேவை; உள்ளடக்கமல்ல". சிவப்பிரகாசனார் சிந்தனையில் உதித்தது இது:—"பழைமையில் காலூன்றிப் புதுமையாகச் செய்து பார்த்தேன். புதுமை விரும்பிகள் புராணக்குப்பை என்கிறார்கள். பழமைப் பண்டிதர்கள் "சேக்கிழார் பாடிய நாயனாரைப் பாட இவனுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது' என்றெல்லாம் பொச்சரிப்புக் காட்டுகிறார்கள். ஐயோ அதைப் பாட நான் பட்ட பாடு! அதை வெளியிட நான் நடந்த நடை" காவியத்துக்கேற்ற—தூய்மையான —முகப்பமைத்தேனே! காடவர் கோன் பூசலாரை வணங்கும் காட்சி. இந்திய ஓவியப் பாணியில் அமைந்த கோட்டுருவம். அது கண்ணைக் கவரவில்லையாம். வெளிப்பூச்சு இல்லையாம். ஒரு பெண்ணின் படம் போட்டிருந்தால் விற்றிருக்கும் என்கிறார்கள், அந்தக் காவியத்திலே ஒரு பெண் பாத்திரம் கூட இல்லையே. பெண்ணுக்கு எங்கே போவது?

சரி......சரி காலம் இப்படியா நெடுக இருக்கப் போகிறது? வாசகர்களின் இரஜனை மாறிக்கொண்டுதான் வரும். இந்த நாட்டில் எங்கோ ஓர் மூலையில் இருக்கும் இலக்கிய இரசிகன் என்னுடைய இந்தக் காவியத்தை இருபத்தைந்து வருடத்துக்குப் பின்பாவது போற்றுவான்; புகழ்வான்!"

'உள்ளக் கோவில்' சிவப்பிரகாசனார் போட்ட புள்ளி தவறே இல்லை. அவர் இருபத்தைந்து வருடகால எல்லை குறித்தார். ஆனால் அது ஐந்து வருடத்திலே கைகூடிவிட்டது.

இருளுக்குப் பின் ஒளி. வெளிப் பூச்சுகளின் சாயம் வெளுக்கத் தொடங்கியது. நாட்டிலே இலக்கிய விழிப்பு ஏற்பட்டது.

'உள்ளக் கோவில்' விமர்சனம் ஒய்யாரமாகப் பவனி வந்தது.

விமர்சகர் காவியத்தின் வெளிப்பூச்சை முடித்துவிட்டு உயிர்நிலையைத் தொட்டுக் காட்டினார். அரசன் கட்டிய கோவில்.. பூசலார் கட்டிய கோவில். ஒன்னது சனங்கள் காணக்கோடிய கற்கோவில். மற்றது யாருங் காணமுடியாத உள்ளக் கோவில். பணக் கோவிலுக்கு முன் மனக் கோவில்; அன்புக் கோவில். எது சிறப்புடையது? எது உயர்வுடையது? எது தூய்மையானது? நடராசப்பெருமான் கனிரவிலே

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## 'சொக்கன்'

கேம்பிக்கொண்டு சீப்புக்குச் சவால் விடுகிற தலைமயிர், சரிந்துபோன முக்கோணம் போல முகத்திலே குத்திக்கொண்டு நிற்கும் லெனின் தாடி. உரித்துவிட்ட சுரு உடம்பைப் போர்த்தபடி தொய்ய இழுத்து விடப்பட்ட 'புரூேட்வே' சேட். அதை அரவணைத்து ஓசிந்து விழுகிற 'கபடீன்' காற்சட்டை. கைவைத்துக் கொள்வதற்கென்றே அமைந்துவிட்ட கால்சட்டைப்பை ஓரங்களிலும், மடித்து விடாத சட்டைக்கை ஓரங்களிலும் குடியேறிச் சிரஞ்சீவித்துவம் பெற்றுவிட்ட எண்ணெய்ப் பிசுக்கு. பூரணமான ஸ்மரணையோடே அலட்சியத்தைப் 'பாஷனு'க்கிக் கொண்டு வாழுகின்ற ஒரு வகையான போக்கு!

மூக்குத் துவாரங்களைப் புகை மண்டலமாக்கி, வாயை அதன் யாக குண்டலமாக்கி எந்த நேரமும் 'திறிரோஸ்' புகைவிடுவதிலே அவனுக்கு ஒரு தனி ஆனந்தம்! அடடா, எவ்வளவு அழகாகப்பேசுவான்? மார்க்ஸிஸமும், சோஷலிசமும், சமத்துவமும் அவனுடைய பேச்சின் உயிர் மூச்சாக அவனையே இயக்குவதுபோல இருக்கும்!

வாழ்க்கையையே இலட்சியத்துக்காக அர்ப்பணித்துக் கொண்டவன்! இலட்சியத்தையே வாழ்க்கையாக்கிக் கொண்டவன் என்றும் சொல்லாம் அல்லவா? வார்த்தையிலே என்ன இருக்கிறது? பாம்பு வளைவதுபோல, நாக்கையும் நெளித்து வளைத்து...... உம்! அவனைப் பற்றி எவ்வளவோ சொல்லலாம்!

பஸ்ஸிலிருந்து இறங்கி ஒழுங்கையில் கால்வைத்துச் சம்பந்த மூர்த்தியின் வீட்டைநோக்கி நடந்து கொண்டிருந்த தங்கராசாவின் மனத்திலே இப்படி எத்தனை எத்தனையோ நினைவுகள்!

"கொழும்பிலே ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைபோல நாங்கள் இருவரும் பழகுகிறோம். முதன்முதல் கொழும்பிலே உத்தியோகம் பெற்றபோது எனக்கு உதவியவன் சம்பந்தமூர்த்தி. அவனுக்குத்தான் எவ்வளவு தாராள மனது! யாழ்ப்பாணத்திலேயே பெரிய வேளாளக் குடும்பம் அவனுடையது. நானோ பள்ள வகுப்பைச் சேர்ந்தவன். அப்படி இருந்தும் எனது சாதியைத் தெரிந்துகொண்டும் என்னைத் தன் உயிர் நண்பனாக நடத்துகிறான் அல்லவா? எல்லாருக்கும் இது முடியுமா? அவன்தெய்வம்!"

யாழ்ப்பாணத்தின் சாதிக் கொடுமையைப்பற்றி அவன் குமுறும்போது பார்க்கவேண்டும். எரிமலை அவனுக்கு முன்னால் வெறுந் தீக்கொள்ளி.

"தங்கா! யாழ்ப்பாணத்தான் சென்ற இடமெல்லாம் அடிமையாய் அவல வாழ்வு நடத்துவது ஏன் தெரியுமா? அவன் சாதிப்பெயரால் ஒரு இனத்தையே நசித்ததனாலேதான்! இந்தக் கொடுமையை நினைத்தாலே எனது நெஞ்சு வெடிக்கிறது.

எனக்குமட்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் ஒரு கீழ்சாதிப் பெண்ணையே என் மனைவியாக்கி உயர்சாதியின் முகத்திலே கரி பூசி வைப்பேன். இருந்து பார்"

தங்கராசாவின் நினைவுகள் அமுதமாகிச் சுவைக்கின்ற வேளையில், அவன் சம்பந்த மூர்த்தியின் வீட்டுப் படலையைச் சமீபித்துக்கொண்டிருந்தான். நெட்டைப் பனையாய் வளர்ந்திருந்த அவனுக்கு வேலிக்குமேலால் உள்ளே சம்பந்தமூர்த்தி நின்ற கோலத்தைக் காண்பது கஷ்டமாக இருக்கவில்லை......!

தாடி மறைந்து சிவப் பழமாய் நாலுமுழ வேட்டியோடு, பட்டை தீட்டிய உடலோடு......!!!......!!!

அட, அட, அடா!

சம்பந்த மூர்த்தியின் முன்னால் அழுக்கு வேட்டியுடன் கைகட்டி கூனிக்குறுகி ஒருவன் நிற்பதையும்......அவனை நோக்கிச் சம்பந்தமூர்த்தி இடியாய் முழங்குவதையும்......

தங்கராசாவின் ஆறடி உருவம் ஓரடியாகி வாமனக் கோலத்தில்......அவன் காதுச் சவ்வுகள் வெடிக்கத் திரும்பி ஓட்டம்பிடிக்கத் தொடங்கினான்!

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## பத்மா - காந்தன்

மனம் உருக, கண்ணீர் பிரவகிக்க அம்பாளின் பூசை
விட்டு கர்ப்பக்கிரகத்தின் திருக்கதவைப் பூட்டி சாவியை எ
ண்டு வெளியே வந்தார் மகாதேவக்குருக்கள்.

அர்த்த மண்டபத்தைக் கடந்து ஸ்தம்பத்தருகில் வ
ஒருமுறை கைகளைக் கூப்பித் தொழுதுவிட்டு வாசலுக்கு வ
இழுத்துப் பூட்டிவிட்டு கோயிலுக்கு முன்பிருந்த வயல்
நடக்கத் துவங்கினார். தெருவை எட்டினதும் ஒருதடவை -
வையாக - கோவிலைத் திரும்பிப்பார்த்தார்.

தொலையில் கோவில் வாசலில், கண்ணாடிக் கூண்டினு
தேங்காய் எண்ணெய் விளக்கு ஒரு திரியில் மின்னிக் கொண்
குருக்களின் உள்ளம் நீருகி வெந்து கொண்டிருந்தது.

குருக்கள் தமது வீட்டுக்குள் நுழையும் போதே வா
செருப்புகளைக் கொண்டு கோவில் முதலாளி வந்திருக்கிறா
தெரிந்து கொண்டார்.

"என்ன ஆச்சரியம்! பல தடவை நானாக அவர் வீடு
டிக் கொண்டும் செவிசாய்க்காத முதலாளி இப்போ என்னை
ருக்கிறாரே!"- குருக்கள் தமக்குள் சிரித்தபடி வீட்டுள் சென்

கோவில் முதலாளி குருக்களைக் கண்டதும் எழுந்து
எடுத்து அரையில் கட்டிக்கொண்டார்.

"பரவாயில்லை பரவாயில்லை. உட்காருங்கள்" எனக்குரு
யோடுகூறி எதிரேயிருந்த வாங்கில் அமர்ந்தார்.

பாக்குச்சீவலைக்கிள்ளி வாயில் போட்டுக் கொண்டு
கிழித்துச் சுண்ணாம்பைத் தடவியபடி முதலாளி பேச்சைத்

"அம்பிகையின் தீபாவளி உற்சவம் வருகின்றது கு
வழமைபோலச் சிறப்பாக இம்முறையும் நடத்த வேண்டு
விரும்புகிறார்கள்" —கோயில் முதலாளி சொல்லிவிட்டு
யைச் செருமிவிட்டு, குருக்களின் முகத்தைப் பார்த்தார்.

குருக்களுக்கு எரிச்சலும் வேதனையுமாக இருந்தது.

## வெளிப் பூச்

"சொல்கிறேனென்று குறைநினைச்சாலும்சரி முதலா
குச் சிறப்புச் செய்ய வேண்டியதே. ஆனால் அம்பாள் மூ
கிடக்கிற பொழுது வெளியில் என்ன வேடிக்கை வேண்டி
—குருக்கள் சொன்னார்.

கோவில் கர்ப்பக்கிரகத்தின் மேற்சுவர் கிலமடைந்திரு
பாளைப் பிரதிஷ்டை செய்துள்ள பீடம், திருமருந்து சார்
மாகி விட்டதால் ஆட்டம் கொண்டிருப்பதையும் மகா
கோவில் முதலாளியின் வீடுதேடிச் சென்று சொல்லி, கே
ஸ்தாபனம் செய்ய வேண்டுமென பலதடவைகளில் இரந்
போதும் அதை எடுத்துச் சொன்னார். பணத்தைத் திர
கோவிலைச் செப்பனிடலாமெனவும் இப்போது வெளி
வெள்ளையடித்து, தீபாவளி உற்சவத்தைச் சிறப்பாகச்
வேண்டுமென முதலாளி ஒரே பிடிவாதமாக நின்றார்.

"என்னை மன்னிக்கவேண்டும் முதலாளி. நான் சொ
ரமாக இருந்தால் அம்பிகை பொறுத்துக் கொள்ளட்டும்.
தில் அம்பாளின் உற்சவம் நடப்பதாயிருந்தால், அதை
முடியாது என் மனம் கூசுகின்றது" —மகாதேவக்குருக்
ளதை நிதானமாகச் சொன்னார்.

முதலாளிக்கு கோபம் வந்து விட்டது! "குருக்க
நாம் வேறு குருக்களைப் பார்த்துக்கொள்ளுவோம். கோ
கொடுங்கள்" — குருக்களிடமிருந்து சாவிக்கொத்தை
முதலாளி விறுவிறுஎனப் போய்விட்டார்,

குருக்களின் கண்களில் நீர் முட்டிவிட்டது! இ
இரவு பகலாக, தொட்டுப் பூசை செய்த அம்பாளை இ
யாது! கோவிலுக்கு உள்ளே போகமுடியாது! அன்றிர
கள் அம்பிகையை எண்ணி எண்ணித் தேம்பினார்.

* *

தீபாவளி அன்று அதிகாலை திடீரென வானம் கறு
டத் தொடங்கி விட்டது!—விடாத மழை; பெருமழை!

[ 10-ம் பக்கம் பார்க்க ]

# னம்' அளிக்கும் தீபாவளிக் கதையரங்கம்

## பத்மா - காந்தன்

னம் உருக, கண்ணீர் பிரவகிக்க அம்பாளின் பூசையை முடித்து
கர்ப்பக்கிரகத்தின் திருக்கதவைப் பூட்டி சாவியை எடுத்துக் கொ
வளியே வந்தார் மகாதேவக்குருக்கள்.
ர்த்த மண்டபத்தைக் கடந்து ஸ்தம்பத்தருகில் வந்து மீண்டும்
றை கைகளைக் கூப்பித் தொழுதுவிட்டு வாசலுக்கு வந்து கதவுகளை
துப் பூட்டிவிட்டு கோயிலுக்கு முன்பிருந்த வயல் வரம்பினூடாக
் துவங்கினுர். தெருவை எட்டினதும் ஒருதடவை - கடைசித் தட
க - கோவிலைத் திரும்பிப்பார்த்தார்.
ாலையில் கோவில் வாசலில், கண்ணாடிக் கூண்டினுள் இருந்து
ய் எண்ணெய் விளக்கு ஒரு திரியில் மின்னிக் கொண்டிருந்தது.
நக்களின் உள்ளம் நீருகி வெந்து கொண்டிருந்தது.
நக்கள் தமது வீட்டுக்குள் நுழையும் போதே வாசலில் கிடந்த
புகளைக் கொண்டு கோவில் முதலாளி வந்திருக்கிறுர் என்பதைத்
வு கொண்டார்.
ன்ன ஆச்சரியம்! பல தடவை நாஞக அவர் வீடு சென்று வேண்
ண்டும் செவிசாய்க்காத முதலாளி இப்போ என்னைத் தேடிவந்தி
ரே!" - குருக்கள் தமக்குள் சிரித்தபடி வீட்டுள் சென்றுர்.
ாவில் முதலாளி குருக்களைக் கண்டதும் எழுந்து உத்தரீயத்தை
அரையில் கட்டிக்கொண்டார்.
ரவாயில்லை பரவாயில்லை. உட்காருங்கள்" எனக்குருக்கள்மகிழ்ச்சி
றி எதிரேயிருந்த வாங்கில் அமர்ந்தார்.
க்குச்சீவலைக்கிள்ளி வாயில் போட்டுக் கொண்டு வெற்றிலையைக்
ச் சுண்ணும்பைத் தடவியபடி முதலாளி பேச்சைத் துவங்கினுர்.
ம்பிகையின் தீபாவளி உற்சவம் வருகின்றது குருக்கள். அதை
போலச் சிறப்பாக இம்முறையும் நடத்த வேண்டுமென ஜனங்கள்
கிருர்கள்" —கோயில் முதலாளி சொல்லிவிட்டுத் தொண்டை
சருமிவிட்டு, குருக்களின் முகத்தைப் பார்த்தார்.
நக்களுக்கு எரிச்சலும் வேதனையுமாக இருந்தது.

### வெளிப் பூச

சால்கிறேனென்று குறைநினைச்சாலும்சரி முதலாளி! அம்பாளுக்
ப்புச் செய்ய வேண்டியதே. ஆனல் அம்பாள் மூர்த்தி கெட்டுக்
பொழுது வெளியில் என்ன வேடிக்கை வேண்டிக்கிடக்கிறது?"
கள் சென்றுர்.
வில் கர்ப்பக்கிரகத்தின் மேற்சுவர் கிலமடைந்திருப்பதையும் அம்
பிரதிஷ்டை செய்துள்ள பீடம், திருமருந்து சார்த்தி வெகுகால
ட்டதால் ஆட்டம் கொண்டிருப்பதையும் மகாதேவக்குருக்கள்,
முதலாளியின் வீடுதேடிச் சென்று சொல்லி, கோவிலுக்கு வால
ம் செய்ய வேண்டுமென பலதடவைகளில் இரந்திருக்கிருர். இப்
அதை எடுத்துச் சொன்னுர். பணத்தைத் திரட்டி ஆறுதலாக
லைச் செப்பனிடலாமெனவும் இப்போது வெளிமண்டபத்துக்கு
படித்து, தீபாவளி உற்சவத்தைச் சிறப்பாகச் செய்யத்தான்
மென முதலாளி ஒரே பிடிவாதமாக நின்றுர்.
ன்னை மன்னிக்கவேண்டும் முதலாளி. நான் சொல்வது அபச்சா
ருந்தால் அம்பிகை பொறுத்துக் கொள்ளட்டும். இந்தக்கோலத்
பாளின் உற்சவம் நடப்பதாயிருந்தால், அதை என்னுல் செய்ய
என் மனம் கூசுகின்றது" —மகாதேவக்குருக்கள் மனத்திலுள்
தானமாகச் சொன்னுர்.
லாளிக்கு கோபம் வந்து விட்டது! "குருக்கள்! நாளை முதல்
று குருக்களைப் பார்த்துக் கொள்ளுவோம். கோவில் திறப்பைக்
ள்" — குருக்களிடமிருந்து சாவிக்கொத்தை வாங்கிக்கொண்டு
விறுவிறுஎனப் போய்விட்டார்,
ங்களின் கண்களில் நீர் முட்டிவிட்டது! இத்தனை காலமாக
லாக, தொட்டுப் பூசை செய்த அம்பாளை இனித் தீண்ட முடி
காவிலுக்கு உள்ளே போகமுடியாது! அன்றிரவு பூராவும் குருக்
பிகையை எண்ணி எண்ணித் தேம்பினுர்.

* * *

வளி அன்று அதிகாலை திடீரென வானம் கறுத்து மழை கொட
டங்கி விட்டது!—விடாத மழை; பெருமழை!

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## கே. டானியல்

அன்னம்மாள் மரணப்படுக்கையில்கிடக்கிருள் சந்தியாக் கிழவன் அவள் காதோடு பேசுகிறன்:

"வானத்தையும் பூமியையும் படைத்தவரே! இந்த ஆத்மாவினுடைய பாபங்களை மன்னித்துக் கொள்ளும்......"

"..............."

அண்ட சராசரங்களுக்கும் ஆணை பிறப்பிக்கும் அருள்மயமான பரிசுத்த பிதாவே! சா நிழலிலே காலடி வைத்திருக்கும் எனக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்......"

"..... ............"

"பரிசுத்த மோட்ச வீட்டின் சர்வாதிகாரியே! மரணச் சரிவிலே சிக்கிச் சரிந்துவரும் என்னைக் கை நீட்டி ஏந்தி உமது நித்த ராச்சிய இன்ப வீட்டில் சேர்த்தருளும் ....."

"கர்த்தரே, உமது கோபாக்கினியின் முன்பு நாமெல்லோரும் தூசிகள். ஆண்டவரே, எமது பெருமதிப்புக்குரிய நோவாவின் சந்ததியில் வந்த எம்மிடம் விசேஷமாக மரணப் படுக்கையில் கிடக்கும் என்னிடமும் உமது அருட் கதிர்களைப் பரப்பும் கர்த்தாவே......"

"..................."

நப்பாசைகளில் அலைந்துபட்ட இந்த ஆத்மாவை உமது கரத்தில் ஒப்படைக்கிறேன்; பரமண்டலங்களில் இருக்கும் நித்தியமான மோட்சவீட்டை மறந்து, தற்காலிகமாகத் தங்கியிருந்த இந்த பூவுலக வீட்டிலே, அனுபவித்த இன்பங்களை நினைத்து மண்ணுசையையும், பொன்னுசையையும், உடலாசையையும் விட்டுவிட முடியாமல் தத்தளித்து, மரணச் சுளிக்குள் அவதியுறும் என்னுடைய துன்பங்களைப் போக்கி, விக்கினமில்லாமல் இவளை உமது காலடியில் சேர்த்துக்கொள்ளும்.

"..............."

"சர்வ வல்லமையுள்ள கர்த்தாவே, இந்த ஜீவனுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளும், மோட்சசாம்ராச்சியத்தில் சேர்த்துக்கொண்டு இந்த ஜீவனுக்கு ஆறுதல் தாரும்......"

"................."

"ஓ, தேவனே! இஸ்பிரீத்துச்சாந்துவாகிய பரிசுத்த ஆவிக்காக நாம் இப்போது காத்திருக்கிறேம். இந்த ஒன்று எனது கடைசி வேளையில் அவரின் வரவுக்காகவே காத்திருக்கிறேன். சடுதியாக அவரை என்னிடம் அனுப்பும். மரணச் சேற்றுக்குள் அமிழ்ந்திப் போகும் என்னை உம்மிடம் வழியனுப்பி வைக்க அவருக்குத்தான் வல்லமைகள் உண்டு.

"..................."

"உலகத்திற்கு உலகமாகவும், நீதிமான்களுக்கு நீதிமானுகவும், வல்லவர்களுக்கு வல்லவனுகவும், இருக்கும் எம் கர்த்தாவே, சகல சீவராசிகளினதும் நல்ல மேய்ப்பனே, உம்முடைய மந்தையில் தெறிகெட்டு நிற்கும் அன்னம்மாளாகிய என்னை உனது இருப்பிடத்துள் சேர்த்துக்கொள்ளும் ....."

"..................."

"கர்த்தாவே, இதோ வந்துவிட்டேன்; இதோ வந்துவிட்டேன்......ஏற்றுக்கொள்ளும் தேவனே..."

* *

அடிவானம் சிவந்து வருகிறது, உயிரினங்கள் உறைவிடம் நோக்கி ஓடிச் செல்கின்றன.

மாதாகோவிலின் மணி ஓசை கேட்கிறது. காகங்கள் கரைகின்றன.

வளர்பிறையின் ஊமை நிலா வெளுவெளுப்பு கரைந்து போகிறது.

இருளின் போர்வை அகல விரிந்து கிடக்கிறது. வான மண்டலத்திலே மேக விரிப்புப் பரந்துபோய்க் கிடக்கிறது.

உலகம் அசைவற்று நிற்கிறது.

அன்னம்மாள் மரணப்படுக்கையில் கிடக்கிருள். அவளை வழியனுப்ப எல்லோரும் காத்திருக்கின்றனர்.

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## 'உதயணன்'

நாவணிச் சேலையை இழுத்து வலது தோளையும் மூடிக்கொண்டு மங்கையர்க்கரசி தகப்பனுரைப் பின் தொடர்ந்துவாசற்படியில் இறங்கினுள். அவளுடைய ஒரு கரத்தை பிடித்தவண்ணம் ஐந்து வயது நிரம்பாத அவளுடைய மகன் நடந்தான்.

வாசலில் நின்றிருந்த காரில் மங்கையர்க்கரசியும் மகனும் ஏறிக்கொண்டனர். சில நிமிடங்களில் கார் புறப்படப்போகின்றது. அவள் தான்குடியிருந்த வீட்டை கடைசி முறையாக எட்டிப் பார்த்தாள். அந்தப் பார்வையில் பரிதாபம் தொங்கிக்கொண்டிருந்தது!

தூரத்தில் அந்தக் கிராமத்து வாலிப முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஒலிபெருக்கி ஒலமிட்ட ஒரு சினிமாபாட்டு காற்றிலே மிதந்து வந்து அவளுடைய காதுச் சவ்வுகளில் பேரிகை கொட்டியது.

அவள் இலேசாகச் சிரித்தாள். உள்ளத்தில் உவகை பொங்கினுல் மட்டுந்தானு சிரிப்பார்கள்? அல்ல. அவளுடைய சிரிப்பின் அர்த்தத்தை அவள் மட்டுமே அறிவாள்.

ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் அவளுடை கணவன் கனகசுந்தரம் அந்தக்கிராமத்து ஆஸ்பத்திரிக்கு மாறிவந்த பொழுது அவளும் கூடவே வந்தாள். வைத்தியர்களுக்குப் பொதுவாகப் பொது மக்களிடம் இருக்கும் செல்வாக்கோ அல்லது கனகசுந்தரத்திடம் இயற்கையாகவே அமைந்து விட்ட நல்ல குணமோ காரணம் என்று சொல்ல முடியாது. அவர்களுக்கு அந்தக் கிராமத்தில் ஒரு நல்ல மதிப்பு இருந்தது.

வந்த ஒரு வார காலத்தில் அந்தக் கிராமத்து வாலிபர் முன்னேற்றச் சங்கம் அவர்களுக்களித்த வரவேற்புபசாரமே இதற்கு ஆதாரமாக இருந்து விட்டது. ஆமாம், அந்த வரவேற்பு இன்னமும் அவளுடைய கண்களில் நிற்கிறதே.........

"நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கிறேன். ஆனல் டாக்டர் கனகசுந்தரம் அவர்களைப்போன்ற ஒரு பொது நலவாதியை என் வாழ்நாளில் இதுவரை கண்டதேயில்லை. அவர் சேவை செய்யவென்றே பிறந்தவர். அவரை நாங்கள் என்றும் மறக்க முடியாது........."

ஒரு சமயம் மங்கையற்கரசிக்கு வயிற்று வலி வந்தபொழுது, வீட்டுக்குள்ளே வைத்தியர் இருப்பதையும் மறந்து, அந்த ஊர் மக்கள் பட்டபாடு கொஞ்சமா? பின் ஒரு தடவை கனக சுந்தரத்தின் மோட்டார் வண்டி அந்த ஊர்க்கோடியில் ஒரு மரத்தோடு மோதிக்கொண்டது. யாருக்குமே ஆபத்தில்லையென்றபோதிலும் வண்டிக்குப் பெருத்த சேதம். அப்பொழுது வீடுதேடிவந்து அனுதாபம் தெரிவித்தவர்கள் எத்தனைபேர்? ஊரிலே பணம் திரட்டி நஷ்ட ஈடு அளிக்க எத்தனித்தவர்கள் எத்தனைபேர்?

தனது கணவன் சம்பளத்திற்காக உத்தியோகம் பார்த்தும்கூட இந்த மக்கள் இவ்வளவுதூரம் நன்றியுள்ளவர்களாக, பண்பாடுள்ளவர்களாக மனிபிமானத்தோடு வாழ்கிருர்களே என்று மங்கையற்கரசியும் ஓரோர் சமயம் நினைப்பதுண்டு.

இவ்வளவையும் பார்த்து வந்த காலதேவன் ஒரு விஷப் பரீட்சை செய்து பார்க்க விரும்பினுன் போலும். கனகசுந்தரமான கனகசுந்தரமே கண்ணை மூடிவிட்டான். செய்தி ஊரெல்லாம் புகைபோலப் பரவியது. பரவி......?

யாரோ இரண்டொருவர் வந்து ஆமோ, அப்படியோ, மெய்தானே என்று கேட்டுவிட்டுப் போனுர்கள். அவ்வளவுதான்.

மங்கையர்க்கரசி கணவனுடைய பிணத்தருகே உட்கார்ந்து அந்த ஊர்மக்களின் இயல்புகளை ஊடுருவிப் பார்க்க முயன்றுள்.......

"அவர் உயிரோடு இருக்கும் வரை இந்த வீட்டில் ஊர்மக்களுக்கு இருந்த அக்கறை இப்போது இல்லையே. ஊருக்கு அவருடைய உதவி தேவைப்

[ 10-ம் பக்கம் பார்க்க ]

## தீபாவளிக் கதையரங்கம்

[9-ம் பக்கத்தொடர்ச்சி]

# வெளிப்பூச்சு

### பத்மா - காந்தன்

அன்றைய உற்சவத்துக்கென டாம்பீகமான பல ஆயிரக்கணக்கான ரூபாய் செலவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சதுர்க்கச்சேரிகள், வாணவேடிக்கைகள் யாவும் நிறுத்தப்பட்டன. அம்பிகையின் தீபாவளி உற்சவம் ரத்து செய்யப்பட்டது!

* *

கோவில் முதலாளி கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது, மகாதேவக்குருக்களின் வீட்டுக்கு ஓடினர்.

''குருக்கள்! குருக்கள்! மன்னிக்க வேண்டும். அபச்சாரம் நிகழ்ந்து விட்டது. அம்பிகையின் தேவை தெரியாமல் வெளிப்பூச்சில் மயங்கி விட்டோம்! - தீபாவளி உற்சவத்துக்கெனத் திரட்டிய பணத்தைக் கொண்டு கோவிலை முதலில் செப்பனிடுவோம்... மீண்டும் திறப்பை நீங்களே ஏற்றுக் கொள்ளுங்கள். இந்தாருங்கள் குருக்கள்!''

முதலாளி சாவிக் கொத்தை நீட்டி குருக்களை இரந்தார்!

எங்கோ கவிந்திருந்த முகில்களை பெருங்காற்று உந்திக் தள்ளிக் கொண்டு வந்து அந்த ஊரில் பருவந்தப்பிய மழையாகஇறக்கிவிட்டதென்றுவிஞ்ஞானம் விளக்கம்கொடுத்ததிபோலும், 'அம்பிகையின் அருள்' என்று நினைந்து நினைந்து மெய்சிலிர்த்த மகாதேவக் குருக்களின் மன நிறைவின் முன்னல் அந்த விளக்கத்துக்கு ஒரு இம்மியளவு மதிப்பும் கிடையாது! ●

### 'உதயணன்'

பட்டது. அதனுல் அவரைத் தேவைப்பட்டது. அதனுல் அவருக்கு வேண்டியவர்களையும் தேவைப்பட்டது. இப்பொழுது அவரே போய்விட்டார். அதனுல்? இவ்வளவு காலமும் இந்த ஊர்மக்கள் எங்களுக்குச்செய்துவந்ததெல்லாம் வெறும் ........?"

* * *

மங்கயற்கரசி காறி உமிழ்ந்தாள்.

அவளுக்கு இனி அந்த ஊரில் எந்த வேலையுமில்லை. எனவே தகப்பனுரின் துணைகொண்டு அவள் தன் சொந்த ஊருக்கே போகிருள்.

கார் வாலிப முன்னேற்றச்சங்க மண்டபத்துக் கருகில் போய்க்கொண்டிருந்தது. அன்று ஏதோ கொண்டாட்டமாக்கும்; மண்டபம் ஒரே கலகலப்பாக இருந்தது. சங்கத் தலைவரின் சொற்பெருக்கு ஒலிபெருக்கி வழியாக ஊரெல்லாம் பரவிக்கொண்டிருந்தது. ''நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கின்றேன். ஆனுல் டாக்டர் செல்வராசன் அவர்களைப் போன்ற ஒரு பொதுநலவாதியை என் வாழ்நாளில்இதுவரைகண்டதேயில்லை. அவர் சேவை செய்யவென்றே பிறந்தவர். அவ்ரை நாங்கள் என்றும் மறக்கமுடியாது..."

மங்கையற்கரசி மீண்டும் ஒரு முறை இலேசாகச் சிரித்தாள். கார் ஒரு புதிய தெருவில் திரும்பி ஓடியது. ●

### கே. டானியல்

சந்தியாக்கிழவன் அன்னம்மாள் காதுக்குள்ளே பேசுகிருள். ஆண்டவனிடம் அவளைக் கையளித்துவிட ஏற்பாடுகள் செய்கிருள்; வழிபோக அவனைப் பக்குவப்படுத்துகிருன்.

அன்னம்மாளின் தலைமாட்டிலே வைக்கப்பட்டிருந்த மெழுகுதிரி உருகி வடிந்து வற்றிப்போகிறது. அவள் அடிச்சுவட்டிலே வேறோர் மெழுகுதிரி நட்டு வைக்கப்படுகிறது.

சந்தியாப்பிள்ளைக் கிழவன் அன்னம்மாளின் தலைமாட்டிலே தலையைத் தாழ்த்திக்கொண்டு காத்திருக்கிருன். "யேசுவே, என் ஆத்துமத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன். காற்று வாக்கில் ஊமைக்குரல் அவன் வாக்கிலிருந்து தொடர்ச்சியாக எழுந்து எழுந்து மடிகிறது, இப்போது அதற்குமேல் எதையும் சொல்ல அவனுக்கு முடியவில்லை. சொல்லி அலுப்பே வந்துவிட்டது.

எல்லோரும் தூங்கி வழிகின்றனர்; அலுத்துக்கொள்கின்றனர்.

அன்னம்மாள் அசைவற்றுக் கிடக்கிருள்.

* *

அடிவானம் சிலிர்த்துச் சிரிக்கிறது. மீண்டும் உயிரினங்களின் ஆரவாரம். கூக்குரல் கீச்சோசைகள்!

சந்தியாக் கிழவன் கண்ணயர்ந்துபோய்க் கிடக்கிருன். எல்லோருமே அயந்துபோய்க்கிடக்கின்றனர்.

மெழுகுதிரி, உருகி, வடிந்து, வற்றிகருகிப் புகைக்கிறது. சந்தியாக்கிழவன் ஏமாந்தது இதுவே முதல்தடவை. பாவம் அவன் அயர்ந்துதூங்குகிருன்! எத்தனை ஆத்மாக்களை அரை மணி நேரத்தில் வழிஅனுப்புபவனை அன்னம்மாள் தோற்கடித்து விட்டாள்!

* *

''அன்னம்மா, மரணப் படுக்கையில் கிடந்தாய், இப்போது மீண்டுவிட்டாய்!

''ஓம் அப்பா, கர்த்தரின் கிருபையால் நான் தப்பிவிட்டேன், நான் கர்த்தருக்கு விசுவாசமுடையவளாக இருக்கிறேன்''

''அட மூன்றுமாத காலத்துள் இப்படி நன்ருகத் தேறிவிட்டாயே! கர்த்தர் உன்னைக் காப்பாற்றி விட்டார். சீக்கிரமாக ஒருகல்யாணத்தைப் பண்ணிக் கொண்டு சந்தோஷமாக வாழு மகளே!''

''அன்னம்மா, பொருள் பண்டக்காரனுகப் பார்த்து ஒருத்தனைக் கட்டிக் கொள் மகளே!''

''பலுகிப் பெருகி, இந்த உலகத்துச் சந்தோஷங்களை அனுபவி மகளே!''

''கர்த்தர் உனக்கு சகல சுகபோகங்களையும் தருவார் மகளே. பூசைப்பலி கேட்கப்போகிறது போ, மகளே போ!''

அன்னம்மாள் நோய் வாய்ப்பட்டு எழுந்து தேறிவிட்டாள் மேல் ஒருநாள் மாதா கோவிலின் வாயிலண்டை அன்னம்மாளுடன் சந்தியாக்கிழவன் இப்படியெல்லாம் பேசிக் கொண்டிருக்கிருன். ●

### 'சொக்கன்'

''அட! பள்ப் பயலே! உனக்கு இப்ப ஒரு மாதிரித்தான் இருக்குது! நேற்றைக்குத் தெருவிலை கண்ட உடனைத் தோள்ச் சால்வையை எடுக்க ஏலாமல் போச்சு. என்ன? பின்னை உங்களுக்குக் கண் தெரியவே போகுது? உங்கடை மக்கள் ஒருமாதிரிக் கால் சட்டை மேல்சட்டை போட்டுக்கொண்டு இரண்டு இங்கிலீஸ் பேசத்தொடங்கீட்டாங்கள். இனி நீங்கள் தலையைக் குனிஞ்சு நடப்பீங்களே?......உங்களை எல்லாம் வைக்கவேண்டிய இடத்திலே வைக்கவேணும்......''

தங்கராசனுடைய ஓட்த்திலும் வேகமாக வார்த்தைகள் வந்து அவனைத் தலைகுப்புற வீழ்த்தி...... நெஞ்சைக் கிழித்து.........

பாவம்! தங்கராசா!

யாழ்ப்பாணத்து மண் வாசனையை உணராது

'எல்லாம் வெளிமயக்கே இறைவா! கச்சி ஏகம்பனே!'

என்று பாட அவன் என்ன வேதாந்தியா? ●

### 'கனகசெந்திநாதன்'

காடவர் கோமானின் கனவிலே தோன்றிப் 'பூசலார் கட்டிய கோவிலின் பிரதிட்டை நாளும் நீ கட்டிய கோவிலின் பிரதிட்டை நாளும்-நேரமும் -ஒன்ருகலின் நீஇன்னெரு நாளைக்கு மாற்றுக' எனச் சொல்கிருர்.

அகக்கோவில் கொண்ட அன்பரைஅரசன் விழுந்து வணங்கியகாட்சி, அப்போது அவன் சொன்ன வார்த்தைகள்—உள்ளத் தூய்மை கொண்ட உங்கள் அகக் கோயிலுக்குமுன் எனது கற்கோவில் வெறும் வெளிப் பூச்சுத்தான். என்ற உண்மைவாசகங்கள் எல்லாம் விமர்சனத்தில் புது மெருகு பெற்றுத் திகழ்ந்தன.

கவிஞர் சிவப்பிரகாசனுரையும் அவரது 'உள்ளக் கோவிலை'யும் தேடி இலக்கிய இரசிகர் கூட்டம் மொய்த்தது. 'பருவ மங்கையின் படுகொலை'-அப்படியும் ஒரு புத்தகம் வந்ததா? வாசகர்கள் மறந்தே போய்விட்டார்கள். ஆயிரத்தில் அதுவுமொன்று.

இரண்டாம் பதிப்புப் போட ஒருவர் ஓடோடி வந்தார். கவிஞர் சொன்ன பதில் அவரைத் திடுக்கிட வைத்தது.

''நான் முன்பெல்லாம் உம்மிடம் எத்தனைமுறை அலைந்தேன். நீர் சரக்கு, உப்பு, புளி வியாபாரம் செய்ய வேண்டியவர். இலாபந்தான் உமது குறிக்கோள். தமிழ் தொண்டு என்று நீர் பேசுவதெல்லாம் வெளிப் பூச்சு. எங்கேயாவது 'பருவ மங்கை'களைத் தேடிப்போம்; பணம் குவிப்பாள். என் முதற் பதிப்பைக் கஷ்டப்பட்டுப் பதித்தானே ஒரு தமிழ்த் தொண்டன், அவனுக்குத் தான் அதன் இரண்டாம் பதிப்பு...மூன்றும் பதிப்பு எல்லாம்...போய் வாரும்''

கவிஞரின் மனைவி குறுக்கிட்டாள். ''வாற சீதேவியைத்தள்ளாதையுங்கோ; தாறதை வாங்கிக்கொண்டு பாட்டுக்களைக் கொடுங்கோ.''

சிவப்பிரகாசர் ஆறுதலாகப் பதில் சொன்னுர். ''காலம் இனி என்னுடையது; வெளிப்பூச்சுக்காரர்கள் ஒழிந்தார்கள், நீ போ உள்ளே!!'' ●





எங்களிடம்

சகலவிதமான

பழவகைகளும்,
குளிர்பான
வகைகளும்
சுத்தமான
வெண்ணெயும்,
பித்தளை, அலுமினியப்
பாத்திரங்களும்

மற்றும் சகலவிதமான சாய்ப்புச் சாமான்களும் கிடைக்கும்.

Dealers in all kinds.
FRUITS, COOL DRINKS, FRESH BUTTER,
BRASS AND ALUMINIUM WARES AND GROCERIES.

# உங்கள் கணவரை மயக்க 'வசிய மந்திரம்' தேவையா?

## [தேவை இல்லாவிட்டாலும் இதை அவசியம் படியுங்கள்]

உங்கள் கணவன்மார் எப்பொழுதும் உங்கள் மீது விருப்பமுடையவர்களாக இருக்கிறார்களா? இல்வாழ்க்கை இன்பகரமாக நடக்க வேண்டுமானால் உங்கள் கணவன்மாரைக் கைக்குள் போட்டுக்கொள்ள வேண்டியது உங்கள் முதற் கடமை!

காலையில் படுக்கையை விட்டு எழுந்தது முதல், இரவில் படுக்கைக்குப் போகும்வரையில் உங்கள் கணவன் மகிழ்ச்சியோடு இருக்கும்படி செய்யவேண்டும். இதற்குச் சில உபாயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. உங்கள் கணவருக்குத் தெரியாமல் இதைக் கடைப்பிடித்துப் பாருங்கள்!

காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்குமுன் மெதுவாகக் கண்ணைத் திறந்து பாருங்கள். உங்கள் கணவன் ஆழ்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தால், உங்கள் மிருதுவான விரல்களால் அவர் மார்பிலுள்ள முடியை வருடுங்கள். அவர் விழித்துக் கொள்ளும் பொழுது நீங்கள் வருடிக்கொண்டுதான் இருக்கவேண்டும்!

கணவன் கட்டிலில் படுத்த வண்ணமே கண்களை மூடிக்கொண்டு கிடந்தால் மெல்லப் படுக்கையை விட்டெழுந்து, உங்கள் கணவனின் பாதத்தடியில் குனிந்து, கால்களில் முத்தமிட்டுவிட்டுப் பின் உங்கள் வேலையைக் கவனிப்பதற்காகப் படுக்கையறையை விட்டு வெளியேறவேண்டும்.

கணவன் படுக்கையை விட்டு எழுந்தவுடன் கட்டாயம் உங்களைத் தேடிக் கொண்டு வருவார்! அவர் அப்படி வருவதற்கு முன் நீங்கள் மீண்டும் படுக்கையறைக்குள் நுழைந்து விடாதீர்கள். காலையில் கணவனின் முகத்தை நேருக்கு நேராக நீங்கள் சந்திக்கும் பொழுது, அவர் முகத்தைக் கனிவோடு நோக்கிய வண்ணம் லேசாக ஒரு புன்முறுவலைச் சிந்துங்கள். அதே சமயத்தில் அவரும் பதிலுக்குப் புன்முறுவலிக்கிறாரா என்பதையும் நீங்கள் அவதானிக்கவேண்டும் அவர் புன்முறுவல் செய்யாமல் இருந்தால் நீங்கள் அவரது கண்களையே கூர்மையாக நோக்கிய வண்ணம் உங்கள் கண்களைப் படபடவென்று மூடித் திறக்க வேண்டும். (சுருக்கமாகச் சொன்னால், 'லேசாகக் கண்ணடிக்க' வேண்டும் என்று கூடச் சொல்லலாம்!) அதற்கும் அவர் சிரிக்கவில்லையென்றால், ஏதாவது ஹாஸ்ய சம்பவங்களைச் சொல்லி அவருக்குச் சிரிப்பை வரவழைக்க முயலவேண்டும்!

கணவன் காரியாலயத்திற்கு வெளியேறுவதற்கு முன்னர், ஓடி ஆடி அவருக்குப் பணிவிடைகள் செய்து, மலர்ந்த முகத்துடன் அவரை வழியனுப்பி வைக்கவேண்டும். கூடுமானால், அவருக்கு ஒரு முத்தம் கொடுத்தும் வழியனுப்பி வைக்கலாம். (ஆனால், உங்கள் குழந்தைகளுக்கு முன்னால் வைத்துக் கணவருக்கு முத்தம் கொடுத்துவிடாதீர்கள்!)

காரியலயத்திலிருந்து 'அவர்' வீட்டுக்கு வரும் பொழுதுதான் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்! வேலைசெய்துவிட்டு அவர் களைத்துப் போய் வருவாரல்லவா? கணவனின் விருப்பமறிந்து, அவருக்குப் பிடித்தமான சிற்றுண்டியைத் தயாரித்து ஆயத்தமாக வைத்திருக்கவேண்டும். அவர் வரும் பொழுது,

**ஜோ. ஏ எம. தாஸ்**

சுத்தமான உடையணிந்து வாசல் படியிலிருந்து அவரை மலர்ந்த வதனத்துடன் வரவேற்கவேண்டும்.

கணவன் வீட்டுக்கு வந்த பின்னர், அவரது உடைகளைக் களைவதற்கும் நீங்கள் உதவி செய்யலாம்.

சில கணவன்மார் காரியாலயத்திலிருந்து அலுத்துப்போய் வருவதால், உங்கள் மீது எரிந்து விழவும் கூடும். அப்படியான நேரங்களில் நீங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்! சில பெண்களிடத்தில் இயற்கையாகவே முன்கோபம் அமைந்திருப்பது இயல்பு. ஆனால் அவர்கள் அதை அடக்க முயலவேண்டும். அதற்கு ஒரு சிறந்த வழி இருக்கிறது.

நீங்கள் முன் கோபம் வரக் கூடிய பெண்களாயிருந்தால், முதலாவது உங்கள் முகத்தை ஒரு முகம் பார்க்கும் கண்ணாடியில் பாருங்கள்; வெகு அழகாக இருக்கும்(!) அடுத்தபடியாக, கொஞ்சம் குளிர்ந்தநீரை வாயில் ஊற்றிக் கொண்டு, துப்பாமலும் குடிக்காமலும் ஐந்து நிமிஷம் வரை வாயிலேயே வைத்திருங்கள். உங்கள் முன்கோபம் காற்றாய்ப் பறந்துவிடும்! உங்கள் கணவன் உங்கள்மீது கோபப் பட்டால் நீங்களும் பதிலுக்குக் கோபப்படக் கூடாது. ஒருவிதமாகச் சிரித்துச் சமாளித்துச் சரிக்கட்டிவிட வேண்டும்.

இரவு சாப்பாட்டுக்குப் பின், படுக்கைக்குப் போகுமுன் ஏதாவது சுவையான சம்பவங்களை நினைவுபடுத்திச் சிரித்துப்பேசி, உங்கள் கணவரை மகிழ்விக்க வேண்டும். படுக்கையில் கணவருக்கு அருகில் நீங்கள் படுத்திருக்கும் பொழுது உங்கள் கணவரின் தலைமுடியை வருடிக் கொண்டிருக்க வேண்டும். அவர் நித்திரைக்கு ஆயத்தமாகா விட்டால், அவருக்கு 'இரவு வந்தனம்' கூறி, அவருக்கு முத்தமிட்டு அவரை நித்திரையில் ஆழ்த்தவேண்டும்.

கணவரின் மனம் நோகாதவாறு உங்களையே நீங்கள் கண்காணித்துக் கொண்டால் கேட்கவா வேண்டும். அதன் பிறகு நீங்கள் ஆட்டிய படியெல்லாம் அவர் ஆடுவார்! உங்கள் மனம் நொந்துவிடக்கூடாதே என்று ஒவ்வொரு சிறு விஷயத்திலும் கவலைப்படுவார். உங்கள் இல்வாழ்க்கைக்கு சொர்க்கலோகம் என்கிறார்களே, அதுகூட ஈடாகாது!

இப்போது தெரிந்து கொண்டீர்களா, உங்கள் கணவரை மயக்கும் வசிய மந்திரத்தை?

அடுக்குமல்லிகைகள் தொடுத்த கூந்தலுடன்
அழகுசொட்டும் மதிவதன அழகு ராணிகளே!



மௌலானுஸ்
ஜவுளி மாளிகையில்
மகோன்னத காட்சி அளிக்கும் புதிய ரமணீகர கட்டிடத்தைப் பார்வையிட்டீர்களா?
அங்கே கண்ணைப்பறிக்கும், காரிகையரின் கருத்தைப்பறிக்கும்
புதியதும், போற்றத்தக்கதுமான டிசைன்களில்
★ நைலோன் சாரிகள் ★ டெக்கா சாரிகள் ★ கொட்டன் சாரிகள்
மணிப்புரி சாரிகள், ஜாக்கெட்புடவைகள், ரேப்பியாவோயில்கள்,
கிளேஸ் கொட்டன்.
பலதரப்பட்ட டிசைன்களில் முதலியனவும்.
மான்ஹாட்டன், டயா, ஹென்லி, வெலோனே.
ஷேர்ட்கள் பல கவர்ச்சிகரமான டிசைன்களிலும், மொத்த சில்லறை வியாபாரிகளுக்கு
வெள்ளவத்தை ஜவுளி ஆலையில் உற்பத்தியாகும் சகல சாரிகள், வேஷ்டி சால்வைகள், லோங்குளோத்,
டவல்கள் முதலிய வெள்ளவத்தை உற்பத்திகளும் கிடைக்கும்.
இன்றே விஜயம் செய்யுங்கள்
மௌலானா (சிலோன்) லிமிட்டெட்,
இரண்டாம் குறுக்குத்தெரு, : : கொழும்பு.

குட்டி நாடகம்

# எழுத்தாளன் இரகசியம்!

''பொன்முடி''

[எழுத்தாளர் ஏரம்பன் வீட்டில் சில எழுத்தாளர்கள் சந்தித்தனர்.......]

பாலன்: மிஸ்டர் மீனன், நேற்று வந்த 'பூங்காவனம்' எண்ட பத்திரிகை படித்தியளா? 'கடம்' எண்ட புனைபெயரிலே "காதல் படும்பாடு" எண்டு ஒரு கதை எழுதியிருக்கிறானப்பா ஒரு பேர்வளி. சினிமா வசனங்கள் சேர்ந்த 'சாம்பார்' தானப்பா அது. இப்படி ஏன்தான் எழுத்தாளர்கள்.........

மீனன்: உத்தி, திருப்பம், அது, இது ஒண்டையும் அவன் கதையிலை காணேம். சிறுகதை எண்டால் கந்தபுராணம் எண்டு நினைத்தானே? சிறுகதையைக் கொலை பண்ணுறனே!

காலன்: அடுக்குத் தொடரிலை எழுதுகிற காலம் மலையேறிப் போச்சு எண்டதை அறியாத அப்பாவியாக் கிடக்கு. அவன் ஏதோ வசனங்களை அடுக்கிக்கொண்டு போறனே அப்பா. ஆளை ஆரென்று தெரிந்தால் அழப்பண்ணிப்போடுவேன்.

ஏரம்பன்: அண்ணை மாரே! நானும்தான் அந்தக் கதையை வாசித்தேன். சுத்த மோசம். எழுதினவன் சரியான 'டுப்' பேர்வழியாகத்தான் இருக்கவேணும். ஏற்கெனவே வந்த 'காதலி கலகா' எண்ட கதைக் கரு அப்படியே இருக்கு அந்தக் கதையில். 'பேசும் படம்' பத்திரிகை வசனங்கள் பந்தி பந்தியாய் கிடக்கு. இப்படிப் பட்டவங்களை நொருக்கவேணும் மிஸ்டர் பாலன்.

பாலன்: இப்படிப்பட்ட பேர்வழிகளால் தானே தமிழ் எழுத்தாளரின் 'சாயம்' களருகுது. சரி 5 மணியாச்சு. எழுத்தாளர் சந்திப்புக்கு போகவேணும். நாங்கள் வாறேம்.

(பாலன் மீனன் காலன் என்ற எழுத்தாளர்கள் போனபின் ஏரம்புவின் மனைவி மாலா வருகிறுள்)

மாலா: 'கடம்' எண்ட புனைபெயரில் 'காதல் படும் பாடு' எண்ட கதையை எழுதினது நீங்கள் தானே! எனக்கு பெரிய நட்பா வாசிச்சுக் காட்டினியளே! இப்பதானே விழங்குது நீங்கள் ஒரு 'டுப்' பேர்வழி எண்டு.

ஏரம்பன்: சத்தம் போடாதை அப்பா! போ உள்ளை. என்ரை மானத்தைக் காப்பாத்த அவங்களோடை நானும் ஒத்துப் பாடினேன். இனி இந்தத்துறைக்கு முழுக்குப் போட்டுடுறேன்.

(படலைக்கப்பால் எழுத்தாளர்களின் சிரிப்பொலி கேட்கிறது)


## சீதா ஸ்பெஷல்

குளிர் பானங்கள்

எல்லாரும் விரும்பி வாங்கிப் பருகுவது
சீதா ஸ்பெஷல் பானங்களே!
பலவித கொண்டாட்டங்களையும்
சிறப்பித்து மகிழ்விப்பது
சீதா ஸ்பெஷல் 'கொக்கோ கோலா!'
டெலிவரி இனும்!

சீதா சோடா பாக்டரி
291, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்.
போன்: 576 தந்தி: 'சீதா' (SITA)



## சாந்த பவான்

(சுத்த சைவ உணவு விடுதி)

- சகல வசதிகளுடன் தங்குவதற்கு அறைகள்
- அறுசுவை மிக்க சுத்த போசனம்
- விருந்துபசாரங்களுக்குப் போதிய இடம்
- விசேஷ ஆடர்கள் குறுகியகாலத்தில் கவனிப்பு

எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற இடம்

சாந்த பவான்
121, மலே வீதி — கொழும்பு-2.



கலைவாணியின் புதிய வெளியீடு !

## தமிழ் மொழிப் பயிற்சி

DESK WORK IN TAMIL

இந் நூல்களில் பிழையின்றி எழுதல், ஏற்ற சொற்களைத் தெரிதல், சரியான முறையில் அவற்றை பிரயோகித்தல், மரபு வழுவாது வாக்கியம் எழுதுதல், பேசுதல், சொற்பெருக்கம் என்பவற்றிற்காய பயிற்சிகள், ஏற்ற உதாரணங்கள், கதைகள், பாட்டுக்கள் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன.

எழுத்துறுப்பமைய எழுதிப்பழகுவதற்கும் இடங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

5 ம் வகுப்பு தமிழ் மொழிப் பயிற்சியில்

N. P. T. A. & N. C. T. T. A. பரீட்சை பத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மற்றும் விபரங்களுக்கு எழுத வேண்டுகிறேம். எல்லாப் புத்தக வியாபாரிகளிடமும் பார்வையிடலாம்.

2-ம் வகுப்பு - 1—00
3-ம் ,, - 1—25
4-ம் வகுப்பு - 1—25
5-ம் ,, - 1—80

கலைவாணி புத்தக நிலையம்

யாழ்ப்பாணம்: ... ... ... கண்டி.

# தமிழ் நாகரிகம் மிகுந்த பாலித்தீவு!

## அழகிகளின் நடனத்தால் புகழ்வாய்ந்த நாடு.



பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாலித்தீவில் இந்தியர்கள் வர்த்தகம் செய்து வந்திருக்கிறார்கள், குடியேறியிருக்கிறார்கள், பாலிமன்னர்களின் மந்திரிகளாகச்சென்று. இந்து பௌத்த சமயங்கள் அங்கு தழைத்தோங்கும்படி செய்திருக்கிறார்கள். சைவசமயத்தைச் சார்ந்த பல ஆலயங்களும், பல விக்கிரகங்களும் இன்றும் அங்கே இருக்கின்றன! புத்தகத்துடன் பிரம்மா, சங்கத்துடன்விஷ்ணு, முக்கண்ணுடன் சிவன் என்று மூவருடைய உருவங்களையும் ஒன்றுசேர்த்துக் கல்லிலும்மரங்களிலும்செதுக்குவது இவர்கள் வழக்கமாக இருக்கிறது.

மலைகளில் பௌத்த மடங்களும், சின்னங்களும் காணப்படுகின்றன. சிலாசனங்களும் கல்வெட்டுக்களும். தேவநாகரி போன்ற 'லிபி' யில் பழைய பாலி சரித்திரத்தை ஓரளவு விளக்குகின்றன, பழைய மன்னர்களின் பெயர்கள் நம் இந்து மன்னர்களின் பெயர்களை நினைப்பூட்டுகின்றன.—சந்திராபய சிம்ஹன்' உக்ரஸேனன், தர்மஉதயணன் (இவன் மனைவியின் பெயர் குணப்பிரிய தர்ம பத்தினி) வாமதேவன், மகுடவங்கன் இப்படிப்பலப்பல!

பழங்காலமுதலே யாத்திரிகர்கள் வசதிக்கென்று ஏற்படுத்தப்பட்ட, தர்ம சத்திரங்கள் இருக்கின்றன. இந்தச் சத்திரங்களில் சாப்பாடு, சமையலுக்கு வேண்டிய பாத்திரங்கள், இரவு தங்குவதற்கான வசதிகள் முதலியன தந்து உதவவேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்கிறார்கள்.

கலைகளிலும்கூட இந்தியமணமே திகழ்கிறது. நாடகநாட்டியங்களுக்கு இந்திய புராணக் கதைகள் உபயோகிக்கப்படுகின்றன இராமாயணம் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான கதை. 'கபி ஹனுமான்' அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்த வீரன். நிழலாட்டமாகவும், மௌனநாட்டியமாகவும்இந்த வீரன் கதையை அலுக்காமல் சலிக்காமல் நடத்திப்பார்த்து ரசிப்பார்கள்: கதைகளில் பஞ்சதந்திரக்கதை இங்கு பிரபலமடைந்து விளங்குகிறது,

வேத காரியங்களுக்குத் தேங்காயெண்ணெய் விளக்குத்தான். அதற்கு உபயோகப்படுவதும் நூல் திரிதான்! இந்தத் தீவிலுள்ளபுரோகிதர்கள் படித்தவர்கள், பண்டிதர்கள். இவர்களுக்கு 'பதண்டா' என்று பெயர்: வைதிக விஷயங்களை நடத்தி வைப்பவர்கள் இவர்கள்தான். பிறப்பு முதல், இறப்பு வரை பதண்டாவைக் கொண்டு செய்யும் பல வைதிகச் சடங்குகள் வழக்கத்தில் இருந்து வருகின்றன. குழந்தைகளுக்குப் பெயர் சூட்டுவது இங்கு ஒரு விழாவாக நடைபெறுகிறது.

இந்துக்களைப் போலவே இறந்தபின் தகனக் கிரியைகள் உண்டு. ஏராளமான பணச்செலவு, தானங்களுடன் இது நடைபெறும்- பதண்டா பன்னிரண்டு நாட்கள் சடங்குகளை மந்திரங்களுடன் நடத்தி வைப்பார். இவைகளுக்கான மந்திரங்களில் சமஸ்கிருதப் பதங்கள் பல உள்ளன.

இந்தியாவுக்கும் பாலித்தீவுக்குமிடையில் மிகப் பழங்காலத்திற்கு முன்பே தொடர்பு அற்றுப் போயிற்று. ஜாவாவின் நெருக்கத்தினாலும், சீனரும் மற்றவர்களும் இங்கு அடிக்கடி போக்கு வரவு வைத்திருந்தாலும், தற்காலத்தில்பாலியின் மதமும் மனப்போக்கும் பல மாறுதல்கள் அடைந்து விட்டன இருந்தாலும். புராதன இந்தியத் தொடர்பு ஒவ்வொரு துறையிலும் புலனாகிக் கொண்டிருக்கிறது.

இங்கு நடனக்கலை பயில்வது ஒரு தேவகாரியமாகக் கருதப்படுகின்றது. ஆலயங்களிலும் பெண்கள் அலங்காரம் செய்து கொண்டு ஆனந்த நடனம் ஆடிக்களிப்பார்கள். அவர்களுடைய கோவில்களையும், அவற்றில் காணப்படும் சிலைகளையும் உற்று நோக்கினால் தென்னிந்தியக் கலையை ஞாபக மூட்டக் கூடியதாக விருக்கும். இது மட்டுமல்ல, அவர்கள் சுவாமி புறப்பாட்டுக்கென உபயோகிக்கும் குடைகளும் விருதுகளும் நம் தமிழ் நாட்டில் சகஜமாகக் காணக்கூடியவை. ஜலக்கரையில் சுவாமி தீர்த்தம் கொடுக்கும் வழக்கம் இங்கும் உண்டு. இஷ்டதெய்வத்துக்கு மணி அடித்து, மலர்களால் அர்ச்சிப்பதும், கைகூப்பி வணங்குவதும், தூபம் காட்டுவதும் அவர்கள் செய்யும் முறையாகும்.


• தொழில்களிலும் பொழுதுபோக்குகளிலும் கூட நமக்கும் அவர்களுக்கும் பல ஒற்றுமையுண்டு. இராட்டையில் நூல் நூற்றல், கம்பளங்கள் நெய்தல், ஓலை, பிரம்பு பின்னுதல் ஆகியவற்றில் அவர்கள் நம் நாட்டினரைப் போலவே ஈடுபடுகிறார்கள். அவர்கள் பின்னும் பாய்களும் கூடைகளும், உருவத்திலும் வேலைப்பாடுகளிலும் நம்மவர்களைப்போலவே காணப்படுகின்றன. சட்டி பானைகளும் கூட அப்படித்தான். மாடு பூட்டி வயல்களில் உழுவதையும் நெல் தூற்றுவதையும், கோழிச் சண்டை நடத்துவதையும் பார்த்தால், பழங்காலத்து இந்திய கிராமம் ஒன்றிற்குள் நுழைந்து விட்டதாகவே தோன்றும். இவற்றையெல்லாம் விட மேலாக மற்றொரு அதிசயமான ஒற்றுமை ஒன்று உண்டு. இங்குள்ள பெண்கள் நம் நாட்டுப் பெண்களைப் போலவே, அரிவாள் மனையில் ஏறி உட்கார்ந்து கொண்டு தேங்காய் துருவும் காட்சிதான் அது!

பண்டிகைகள், திருவிழாக்கள் கொண்டாடுவதிலும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் ஒற்றுமைகள் இருக்கின்றன. குருத்து ஓலையைக் கொண்டு தோரணம் கட்டுகிறார்கள் வருடத்தில் ஒரு நாள் கலைவாணிக்குப் பூஜை செய்கிறார்கள். இந்தப் பூஜையில் ஓலைச்சுவடிகள் ஈறாக பல புதிய நூல்களும் இடம் பெறுகின்றன வர்ணங்கள் பூசுவதிலும், நுணுக்கமான வேலைகள் செய்வதிலும் இவர்கள் சமர்த்தர்கள். மரத்தைச் செதுக்கி, அற்புதமான மரப்பொம்மைகளைச் செய்கிறார்கள். அவர்கள் சிற்பங்களையும், சிற்பங்களில் வடிக்கும் தெய்வ உருவங்களையும் பார்த்தால், தமிழகத்தில் வந்துதான் பயிற்சி பெற்றுச் சென்றார்களோ என்று சந்தேகம் கொள்ளக்கூடியதாகவிருக்கும்:

பாலி மக்களிடத்திலுள்ள பழைய பழக்க வழக்கங்களில் இந்துக்களுக்கு மிகவும் பரிச்சயமான அநேகம் காணப்படுகின்றன. நரசிங்காவதாரம் போன்று வேடமணிந்து கூத்தாடும் பழக்கம் இன்னும் இங்கு நடைமுறையில் இருந்து வருகின்றது, இறந்தவரின்சடலத்தை ரிஷபம் போன்ற உருவம் செய்து, அதனுள் வைத்துத் தகனம் செய்கிறார்கள். இதனால் இறந்தவர் சிவனடி சேருகிறார் என்ற நம்பிக்கை! தமிழர்களின்சம்பிரதாயத்துக் கொப்ப, பந்தியாக அமர்ந்து உணவருந்துதல், காதுகளில் பூக்களைச் செருகுதல், கைகூப்பித் தொழுதவாறு ஆலயம் செல்லுதல், ருத்ராட்ச மாலைகளை அணிந்து கொள்ளுதல் முதலியவை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். ●


சங்கீதக் கருவிகள்

புதிதாக வாங்குவதற்கும் பழுதடைந்தவற்றைப் புத்தம் புதிதாக மூன்று வருட உத்தரவாதத்துடன் பழுது பார்ப்பதற்கும்





மற்றும் சங்கீதக்கருவிகளின் உப உறுப்புக்கள் சங்கீதப் புஸ்தகங்கள் முதலியவற்றை சரசமான விலைகளில் வாங்குவதற்கும் பிரபல ஸ்தாபனத்திற்கு தவறாது விஜயம் செய்யுங்கள்.

பம்பாய் ஹார்மோனியம் கம்பெனி,

(புரொப்ரைட்டர்: பி. ஈ. பெரேரா)

122. செட்டியார் தெரு. கொழும்பு போன் 5817



"ஐயா...'செனட்'டுக்குப் போகத் தெண்டிச்சனீங்க;—வாய்க்கேல்லைப் போலை?"

"போகுது சனியன்; பாளிமெந்து எலச்சன் வரட்டும், பாப்பம்"

"அது வீண் சிலவய்யா...அடுத்த முறையும் 'செனட்'டுக்குத்தான் 'றை'பண்ணுங்கோ காசுசிலவளிக்க வேண்டாம். 'காக்கா' பிடிச்சாப் போதும்!"

## நன்றி

எமது திருமண வைபவத்திற்கு நேரில் வருகை தந்தும், அன்பளிப்புகள் அளித்தும், வாழ்த்துக்கள் அனுப்பியும், வாழ்த்துரைகள் நிகழ்த்தியும் கௌரவித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புகைப்படக் கலைஞர்.
கிங்ஸ்லி S. செல்லையா.

கே. ராஜலெட்சுமி.

சென் யோசப் வீதி
கொழும்பு-14


## 5 ம் வகுப்பு வினுப்பத்திரங்கள்

1. தமிழ் (பாஷை) 2. கணிதம் 3. சூழல். 4. ஆங்கிலம்

ஆகிய நான்கு முக்கிய பாடங்களுக்கும் பரீட்சையில் வருவன போன்ற மாதிரி வினுப்பத்திரங்கள் தயாராக உள்ளன. இவற்றிலேயே விடைகளும் எழுதலாம். ஒவ்வொருபாடத்திற்குரிய புத்தகமும் தனித்தனி 60. சதம். தொகையாக வாங்குவோருக்கு கழிவு உண்டு.

விற்பனையாளர்: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்,

◎ உறுதியான தயாரிப்பு
◎ நீடித்த உழைப்பு
—இதனுல்

எல்லாரும் இப்போது
விரும்பி வாங்குவது

# ஆறுமுகம் பிரான்ட் கல்கத்தா வாளிகளே!

நீங்களும் அடுத்தமுறை வாளி வாங்கும்போது "ஆறுமுகம் பிரான்ட் கல்கத்தா வாளி" என்றே கேட்டு வாங்குங்கள். துருப்பிடிக்காது நீடித்து உழைப்பதன் மூலம் அவை உங்களுக்குப் பூரண திருப்தியளிக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்;

★ ஆறுமுகம் ஹாட்வயர் ஸ்டோர்
19, மின்சார நிலையவீதி : யாழ்ப்பாணம்.
போன். 302


'புதினம்' உங்களூர் ஏஜென்டிடம் கிடைக்காவிட்டால் ஓராண்டுக் கட்டணம் ரூபா 8-00 கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். கிழமை தவருது வீடு தேடி வரும்.
புதினம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.


ARTIST SNR
ஓவியர் எஸ்.என்.ஆர்
PROP: S.N.RAJAH, ART TEACHER
Specialists in: Signboard, Drawing Etc:

ஆடவர்கள், பெண்கள் சிறுபிள்ளைகள்,
அழகான ஆபரணமும் ஆடையும் அணிந்தால்
மட்டும் திருப்தியடைய முடியாது
அழகான பாதரட்சையும் வேண்டும்;

# யாழ்ப்பாண சப்பாத்து மாளிகை

51, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

அப்படியானுல்
யாழ்ப்பாண சப்பாத்து மாளிகைக்கு
விஜயஞ் செய்து திருப்தியடையுங்கள்.

# திரை மறைவில்

## கட்சிகளுக்குள் குத்துவெட்டு

செனட் சபைத் தேர்தல் போட்டியின்றி நடைபெற்றுவிட்டதல்லவா? ஆனால் ஐந்து செனட்டர்களின் பெயர்களையும் தீர்மானிக்கும் விஷயமாகத் தமிழரசுக் கட்சிக்குள்ளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் ஆளும் கட்சிக்குள்ளும் நடந்த குத்துவெட்டுக்களோ அனேகம். தமிழரசுக் கட்சிக்குள் நடந்த குத்து வெட்டுகள் பற்றிய செய்திகளை முன்பு அறிந்கொண்டீர்கள். பலத்த குத்து வெட்டு வெட்டுகளுக்கும் போட்டிகளுக்கும் பின்புதான் ஐக்கியதேசியக் கட்சியின் அபேட்சகராக டாக்டர் கெ. வி. பி. பீரிஸ் தெரிவு செய்யப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் அபேட்சகராகத் திரு. எட்மன்ட் கூரேதான் தெரிவு செய்யப்படுவார் என்று யாவரும் எதிர்பார்த்தார்கள். அவரையே கட்சித் தலைமைப் பீடமும் ஆதரித்தது. ஆனால் கட்சியில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த டாக்டர் பீரிஸ்சே இறுதியில் அபேட்சகராகத்தெரிவு செய்யப்பட்டார்.

## பிரதமரின் ஆதரவாளர்கள் தோல்வி

அரசாங்கக் கட்சி மூன்று அபேட்சகர்களைத் தெரிவு செய்ததல்லவா? அந்த மூன்று அபேட்சகர்களையும் தெரியும் விஷயத்தில் பெரிய குத்துவெட்டுக்கள் நடைபெற்றதாகத் தகவல்கள் கிடைத்துள்ளது. மூன்று இடத்திற்கும் முப்பது பேருக்கு மேல் போட்டியிட்டார்கள். அரசாங்கம் பாராளுமன்றக் கட்சிக் கூட்டம் ஆரம்பமாகியதும் சுகாதார அமைச்சர் திரு. ஏ, பி. ஜயசூரியாவை முதலில் யாவரும் ஏகமனதாகத் தெரிவு செய்ய வேண்டுமென்று பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கோரினராம். அக்கோரிக்கையை அரசாங்கப் பாராளுமன்றக் கட்சி ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாம். அதற்கு அடுத்தாற்போல் மிகுதி இரு அபேட்சகர்களையும் தெரிவு செய்யும் வேலையைச் செய்ய ஆரம்பித்தனர். முதல் வாக்கெடுப்பின்போது பதின்மூன்றுபேர் தெரிவு செய்யப்பட்டனர். அந்த வாக்கெடுப்பின் போதுபிரதமரின் அபேட்சகர்களின் ஒருவரானதிரு. விஜயகுலசூரிய (காலியின் முன்னைநாள் மேயர்) முதலாவதாகவந்தார். பிரதமரின் மற்ற அபேட்சகரான திரு. சோமரத்தினவிற்கு ஒரேயொரு வாக்கு மட்டும்தான் கிடைத்தது.

இரண்டாவது வாக்கெடுப்பின்போது ஐவர்மட்டுமே தெரியப்பட்டனர். முதலாவது வாக்கெடுப்பில் முதலாவதாக வந்த திரு. விஜயகுலசூரியா இந்த வாக்கெடுப்பின்போது நிராகரிக்கப்பட்டார். பிரதமரின் பட்டியலில் இடம்பெற்றவர்கள் எவரும் இரண்டாவது வாக்கெடுப்பில் தெரிவுசெய்யப்படவில்லை. மூன்ருவது வாக்கெடுப்பின்போது தேவைப்பட்ட இரண்டு அபேட்சகர்களும் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் கண்டியர்; மற்றவர் சலாகம சமூகத்தைச் சேர்ந்தவர்.

## பிலிப் ஏற்படுத்திய கிலி:

செனட்டர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனரல்லவா! வியாழக்கிழமை பிற்பகல் நாலு மணிக்கு அபேட்சகப் பத்திரம் தாச்குதல் செய்யும் நேரம் முடிவடைந்தது. ஐந்து அபேட்சகர்கள்தான் அபேட்சகப் பத்திரம் தாக்கல் செய்திருக்கிறுர்கள் என்ற செய்தி பிற்பகல் இரண்டு மணிக்கே தெரிந்துவிட்டது. இரண்டு மணிக்குச் சில நிமிடங்களுக்குப்பின் திரு. பிலிப் குணவர்த்தன அபேட்சகர் பத்திரமொன்றைக் கோரிப் பெற்றுக்கொண்டு வெளியே போனர். சிலரின் வற்புறுத்துதலின் பேரில் ஆருவது அபேட்சகர் ஒருவரை நிறுத்த அவர் முயன்றதாகவும் பின்பு அவர் மனம் மாறிவிட்டதாகவும் அரசியல் வட்டாரங்களிலுள்ளவர்கள் பேசிக்கொண்டார்கள்.

## அடைய முடியாத பேரவா

சிறுபான்மைத் தமிழர் மகாசபையை வைத்துக்கொண்டு கொழும்பிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக் காரியாலத்திற்கு அடிக்கடி யாத்திரை செய்யும் ‘பாவம்’ எம். சி. சுப்பிரமணியத்தின் பேரவா இன்னும் பூர்த்தியடையாத வெறும் கனவாகவேயிருக்கின்றது. அரசாங்கத்திற்கு அவரும் அவருடைய கையாட்களும் செய்த பெருந்தொண்டுகளுக்குப் பிரதியுபகாரமாக அரசாங்கக் கட்சியினர் அவரின் பெயரையும் பரிசிலனைக்கு எடுத்தனர். ஆனல் முதலாவது வாக்கெடுப்பிலேயே அவரின் பெயர் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அவர் தொண்டு செய்யும் கம்யூனிஸ்ட் கட்சியினர் அவரின் பெயரை பிரேரிக்கக்கூட முன்வரவில்லை.

## பத்திரிகை நகல் மசோதா

மந்திரிசபையின் பத்திரிகை நகல் மசோதாவை அரசாங்கப் பாராளுமன்றக் கட்சி நிராகரித்து விட்டதல்லவா? பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும் மசோதாவொன்றைத் தயாரிக்குமாறு அரசாங்கம் பாராளுமன்றக் கட்சி மந்திரி சபையைக் கேட்டிருக்கின்றது. மந்திரி சபையில் நடைபெறும் கோஷ்டிச் சண்டைக்குள் சிக்கிக்கொண்டு தவிக்கிறது பத்திரிகை மசோதா. பீலிக்ஸ் - சாம் பி. சி. கோஷ்டியினர் பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்ற கொள்கையையுடையவர்கள். சி. பி. டி. சில்வா கோஷ்டியினர் அதற்கு எதிரான கொள்கையுடையவர்கள். பத்திரிகைகளை அரசாங்கம் எடுப்பதைச் சீக்கிரத்தில் நடத்த பீலிக்ஸ் கோஷ்டியினர் முயலுகின்றனர். அந்த முயற்சியைத் தோற்கடிக்க முயலுகின்றனர், மற்றக் கோஷ்டியினர். இந்தக்கோஷ்டிச் சண்டையின் விளைவாகவே பத்திரிகைகளை அரசாங்கம் எடுக்கும் விஷயம் இவ்வளவு காலமும் தள்ளிப் போடப்பட்டு வந்திருக்கின்றது. இனிமேலும் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வரும் போலத் தோன்றுகிறது.

— “அம்பலத்துறைவோன்”


தீபாவளி
விசேஷ
விற்பனை

★ சோட்ஸ்
★ சேட்ஸ்
★ கவுண்
★ புஸ்சேட்

சிறந்த ரகங்களை நம்பிக்கையுடன் குறைந்தவிலையில் வாங்க,

யாழ்ப்பாணம்
றெடிமேட்
ஸ்டோர்ஸ்
6, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இந்தப் பொருட்களை நம்பிக்கையான வர்த்தகரிடமிருந்தே வாங்குங்கள்:

◎ இங்கிலீஸ் மருந்துகள்
◎ சாய்ப்புச் சாமான்கள்
◎ சுத்தமான நல்லெண்ணை
◎ சுத்தமான பசுநெய்

நம்பிக்கைக்கும் நாணயத்துக்கும் புகழ்பெற்ற எங்களிடம் மேற்படி பொருட்களை நியாயமான விலைகளில் பெறலாம்.

நியூ மெடிக்கல் ஹோல்
உரிமையாளர்: சி. நடராசா
மெயின் ஸ்றீற், : : பருத்தித்துறை.

சேலம்
S. V. R. கண்டர் R. I. M. P. அவர்கள் தயாரிக்கும்
வீரிய விர்த்தி மாத்திரை
மிதமிஞ்சிய உஷ்ணத்தினுலும், அமிதபோகத்தினுலும் தாது நீர்த்துப்போகுதல், சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்புத் தளர்ச்சி, சக்தி குறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி சர்வநாடி நரம்புகளும், வலுவைக் கொடுக்க வல்ல சிறந்த வீரிய மாத்திரை.
24 மாத்திரைப்புட்டி ரு. 7-00
லேபனம் மெழுகு
குறி சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல். தளர்ச்சியடைதல், உறுதியின்மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.
1 அவுன்ஸ் புட்டி ரூபா 5-00
தேவைக்கு எழுதவும்:
கன்னையா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
Prop: S. M. R. M. S.
ராகலை பஜார், ஆள்க்கருணை.
(சிலோன்) (P. O.)

சுத்தமான குரக்கன் மா
VEENA MARK
வீணா மார்க்
1 இறா: 1 இறா:
சரஸ்வதி மில்ஸ்
190 - கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.


SRI KALYANI PRINTERS THORANA JUNCTION - KELANIYA

# புதினம்

சுவையான செய்திக் கிழமை இதழ்...

தீபாவளிச் சிறப்பிதழ்

எல்லா அம்சங்களும் பொருந்திய
மிகச் சிறந்த கலண்டர்
ஆனந்தா
திருக்குறட்
கலண்டர்களே!
தயாரிப்போர்: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

உங்கள் அபிமானத்துக்குரிய 'மில்க்வைற் சோப்'
புதிய கவர்ச்சிகரமான மேலுறையுடன்
நவீன தயாரிப்பாக
உங்களுக்குச் சேவை செய்ய வருகிறது!




இப்பத்திரிகையை அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: பொன்னலை தி. ச. வரதராசன்.